# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN




## உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்

நீதி.28:20

**TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE**

March - April 2020
Volume : 60

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 2

# மத்திய வாலிபர் முகாம் - 2020





ஆசிரியரிடமிருந்து........!

# உண்மையுள்ள மனுஷன்

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

இன்று உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள் (சங்கீதம் 12:1). உண்மையுள்ள மனுஷனை கண்டுபிடிப்பவன் யார்? என்று வேதம் கூறுகிறது (நீதி. 20:6). 'உண்மை' என்பது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை குணங்களில் ஒன்றாகும். உண்மையில்லாமல் தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் பெற முடியாது. உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் என்று வேதம் கூறுகிறது (நீதி.28:20). 'உண்மை' (faithfulness) என்கிற சொல்லுக்கு எபிரெய மொழியில் எமுனா *(emunah)* என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எமுனா என்பதற்கு நிலைத்திருத்தல், நம்பிக்கைக்குரியவராக இருத்தல், தீர்மானங்களில் உறுதியாக இருத்தல், சொன்ன வாக்கைக் காப்பாற்றுதல் என்று பல அர்த்தங்கள் உண்டு. உண்மை என்பது ஒரு குணாதிசயம். நம்முடைய தேவன் உண்மையுள்ளவர் (1கொரி.10:13; 1தெச.5:23). அவர் உண்மையின் வடிவமாகவும், அவருடைய வார்த்தைகள் உண்மையின் வெளிப்பாடுகளாகவும் இருக்கின்றன. இந்த “உண்மை” என்கிற கர்த்தருடைய குணாதிசயம் அவருடைய பிள்ளைகளாகிய நமக்குள்ளும் காணப்பட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நாம் உண்மையாயிருக்க வேண்டிய சில பகுதிகளை இங்கு காண்போம்.

### 1. குடும்பத்திற்கு உண்மையாயிருங்கள்
### Be faithful to your FAMILY

முதலாவது, உங்கள் வாழ்க்கைத் துணையாகிய கணவன்-மனைவிக்கு (Companion) உண்மையாயிருங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் திறந்த உள்ளத்தோடு இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் நல்ல துணையாகவும், பெலனாகவும் இருக்க வேண்டும். உன் உடன்படிக்கையின் மனைவி/கணவனுக்கு துரோகம்பண்ணாதே என்று கர்த்தர் சொல்லுகிறார் (மல்கியா 2:14). பாலியல் வாழ்வில் உண்மையும், உத்தமமும் மிகவும் அவசியம். திருமண வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட எந்த முறையற்ற உறவுக்கும் யோசேப்பை போல் விலகி வாழுங்கள் (ஆதி.39:9). விபச்சாரம், மற்றவருக்கு தெரியாமல் ஆபாச படங்கள் பார்ப்பது, தவறான உறவு போன்றவைகளை தேவன் வெறுக்கிறார்.

இரண்டாவது, உங்கள் பிள்ளைகளிடம் (Children) உண்மையாயிருங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள். மாதிரியுள்ள தாயாக, தகப்பனாக செயல்படுங்கள். பிள்ளைகளிடம் நல்ல தரமான, நேரம் செலவழியுங்கள். பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். பிள்ளைகளோடு சேர்ந்தும் ஜெபியுங்கள். இன்று அநேக குடும்பங்களில் பெற்றோர் பிள்ளைகளை நல்ல ஆவிக்குரிய நிலையில் வளர்க்க பிரயாசம் எடுப்பதில்லை. உங்கள் பிள்ளைகளை குறித்து தேவன் உங்களிடம் கணக்கு கேட்பார். அவர்களைப் பரலோகம் கொண்டு சேர்ப்பது பெற்றோராகிய உங்கள் பொறுப்பு. ஏலியைப் போலிராமல் ஆபிரகாமை போலிருங்கள் (வாசியுங்கள் 1 சாமு.2:12; 3:13; ஆதி. 18:19). அதேப்போல் பிள்ளைகளும் தங்கள் பெற்றோர்களுக்கு எல்லா காரியங்களிலும் உண்மையாக இருக்க வேண்டும் (கொலோ.3:20)

## 2. பணத்தில் உண்மையாயிருங்கள்
## Be faithful with your FINANCE

அநீதியான உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? (லூக்கா 16:11) என்று இயேசு கூறினார். பணத்தில் உண்மையாயிராவிட்டால் தேவன் நமக்கு ஆவிக்குரிய கிருபைகள், வரங்கள், வல்லமைகள், வேத ஞானம், ஜெபத்திற்கு பதில் ஆகியவற்றை தருவது எப்படி?

**பணத்தை சம்பாதிப்பதில் உண்மை :** பணத்தை சம்பாதிப்பதில் தேவனுடைய பிள்ளைகள் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும். கடினமாக உழைத்து சம்பாதிக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது. 'வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம், கைப்பாடாய் சேர்க்கிறவனோ விருத்தியடைவான் (நீதி.13:11)'. கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது (நீதி.11:1;20:10,23). சுமுத்திரையான நிறைக்கல்லோ அவருக்குப் பிரியம் (ஓசியா 12:7; மீகா 6:11, உபாகமம் 25:15). நேர்மையற்ற குறுக்கு வழியில் பணம் ஈட்ட முயற்சிப்பது, அநியாய வட்டி வாங்குவது, இலஞ்சம் வாங்குவது, திருட்டு போன்ற காரியங்களில் தேவப்பிள்ளைகள் ஈடுபடக் கூடாது (நீதி.28:8; சங்கீதம் 15:5; நீதி.15:27;16:8). மேலும் உங்கள் வேலை ஸ்தலத்தில் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு வேலை செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடு மனப்பூர்வமாகவும், உண்மையாகவும் பணி செய்யுங்கள் (எபே.6:6; கொலோ.3 : 22).

**பணத்தை செலவழிப்பதில் உண்மை :** பணக்காரியங்களல் நாம் திறந்த புத்தகமாக (transparent) இருக்க வேண்டும். பணத்தை செலவழிப்பதில் ஒரு உண்மை தேவை. தேவன் தந்த வருமானத்திற்குள் செலவு செய்ய பிரயாசப்படவேண்டும். முதலாவது தேவனை முதற்பலன்களினால் கனம்பண்ணுங்கள் (நீதி. 3:9,10). வீண் செலவுகள், கடன் வாங்குதல் ஆகியவற்றை தவிர்க்க பழகுங்கள் (நீதி.22:7). போதும் என்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் (1 தீமோ.6:6; எபி.13:5). தேவன் உங்கள் தேவைகள் அனைத்தையும் சந்திப்பார் என்று விசுவாசியுங்கள் (பிலி.4:19). ஆம், உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்.

## 3. உங்கள் திருச்சபைக்கு உண்மையாயிருங்கள்
## Be faithful to the FELLOWSHIP

விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபைக்கு உண்மையாய் இருக்க வேண்டும். ஸ்தல சபை ஆராதனையில் தவறாமல் நேரத்திற்குச் சென்று கலந்து கொள்ள வேண்டும் (எபி.10:25;அப்.2:42). திருச்சபைப் பணிகளுக்காகவும் தேவ ராஜ்யத்தின் விரிவுக்காகவும் உங்கள் தசமபாகங்கள் மற்றும் காணிக்கைகளை ஒழுங்காக செலுத்தவேண்டும் (மல்.3:10; லேவி.27:30; நீதி.3:9,10). உங்கள் தசமபாகங்களை பல ஊழியங்களுக்கு பிரித்துக் கொடுப்பது முறையானது அல்ல. நீங்கள் அங்கம் வகிக்கும், உங்களை விசாரிக்கும் ஸ்தல சபைக்குத் தான் அது கொடுக்கப்பட வேண்டும். மீதமுள்ள 90% பணத்தில் தேவ வழிநடத்துதலின்படி நல்ல ஆவிக்குரிய ஊழியங்களை தாங்கலாம். சபையில் ஒருவருக்கொருவர் விரோதமாய் ஒருபோதும் பேசாதிருங்கள் (யாக்.4:11). ஒற்றுமையைக் காத்துக்கொள்ளுங்கள் (எபே.4:3). உங்கள் ஸ்தல சபை போதகருக்கு உண்மையாயிருங்கள். உங்களை நடத்துகிறவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபி.13:17). உங்கள் ஸ்தல சபை போதகரோடு இணைந்து தேவன் உங்கள் சபைக்கு அவர் மூலம் தந்த தரிசனத்தை நிறைவேற்ற உண்மையாயிருங்கள். உங்கள் தாலந்துகளை கண்டுபிடித்து அவைகளை தேவ ராஜ்யத்தின் விரிவுக்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் உண்மையாக பயன்படுத்துங்கள் (மத்.25:16-18). ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதிலும், சபை ஊழியங்களில் பங்கு பெறுவதிலும் உண்மையாயிருங்கள். அப்பொழுது ஒரு நாள் இயேசு,

'நல்லது உண்மையும் உத்தமமுமான ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய் உன்னை அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பேன்' என்று உங்களைப் பார்த்துக் கூறி உங்களை ஆசீர்வதிப்பார் (மத்.25:21,23).

### 4. உங்கள் விசுவாசத்திற்கு உண்மையாயிருங்கள்
### Be faithful to the FAITH

இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் சத்தியத்தில் உறுதியான நம்பிக்கை (convictions) இல்லாதவர்களாய் இருப்பதை காண்கிறோம். வேதத்தின் முக்கிய அடிப்படை சத்தியங்களை அறியாமலிருக்கிறார்கள். ஆகவே பெற்றோரும் ஊழியர்களும் வேத சத்தியங்களை பிள்ளைகளுக்கும், குடும்பத்திற்கும், விசுவாசிகளுக்கும் உண்மையாய் போதிக்க வேண்டும் (உபாகமம் 11:20;2 தீமோ.2:15). சில அடிப்படை வேத சத்தியங்களாவன–வேத வாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டவை, திரித்துவ தேவன், கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பு, இயேசுவின் தெய்வீகம், இயேசுவின் பரிசுத்த வாழ்வு, இயேசுவின் பிராயச்சித்த பலி, இயேசுவின் உயிர்த்தெழுதல், இயேசுவின் இரண்டாம் வருகை, பாவிகளின் நரக தண்டனை, கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் போன்றவை. இந்த அடிப்படை சத்தியங்களை விசுவாசிப்பதில் உண்மையாயிருந்து தேவனுக்கு சாட்சியாயிருக்க வேண்டும். கடைசி நாட்களில், ஜனங்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், சத்தியத்திற்கு செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும் (2தீமோ.4:3,4). ஆகவே, துர் உபதேசங்களுக்கும், கட்டுக்கதைகளுக்கும் விலகி சத்தியத்தில் உறுதியாய் நிற்க உண்மையாயிருங்கள் (2 தீமோ.4:4; கொலோ. 2:5:6). இயேசு சீக்கிரம் வருகிறார்!

### 5. மரணபரியந்தம் உண்மையாயிருங்கள்
### Be faithful to the FINISH

நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் என்று இயேசு கூறுகிறார் (வெளி.2:10). நன்றாக ஆரம்பிப்பது முக்கியம் ஆனால் நன்றாக முடிப்பதுதான் அதைவிட அதிக முக்கியம் (2தீமோ.4:7; பிரசங்கி 7:8). கிரேக்க நாட்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் விசேஷமானவைகள். அதில் ஓட்டப்பந்தயத்தில் முதலாவது வந்தவர் வெற்றிப்பெற்றவர் அல்ல. ஆனால் தன்னுடைய கையிலுள்ள தீவெட்டியை (torch) அணையாமல் கொண்டு வந்து முடிப்பவர்களே வெற்றிப்பெற்றதாக அறிவிக்கப்படுவர். நாமும் நம்முடைய கையிலுள்ள 'உண்மை' என்னும் தீவெட்டியை நம்முடைய மரணம் அல்லது கிறிஸ்துவின் வருகைப் பரியந்தம் அணையாமல் காத்துக் கொள்ள பிரயாசப்படுவோம். கர்த்தர் தாமே நமக்கு ஜீவ கிரீடத்தை தருவாராக!

கடைசியாக சகோதரரே, சின்ன சின்ன காரியங்களில் உண்மையாயிருங்கள் (Be faithful in SMALL things) (தானியேல் 6:4). அந்தரங்க காரியங்களில் உண்மையாயிருங்கள் (Be faithful in SECRET things). ஒருவரும் காணாத நேரத்தில், இடங்களில் நீங்கள் செய்யும் காரியங்களில் கர்த்தருக்கு பயந்து உண்மையாயிருங்கள் (ஆதி.39:9). ஆவிக்குரிய காரியங்களிலும் உண்மையாயிருங்கள் (Be faithful in SACRED things). தேவனோடு அனுதினமும் ஜெபிப்பதிலும், வேதம் வாசிப்பதிலும் உண்மையா யிருங்கள் (தானியேல் 6:10). ஆம், மேலும் வேதம் சொல்லுகிறபடி, இருதயத்தில் உண்மை (நெகேமியா 9:8), கொஞ்சத்தில் உண்மை (லூக்கா 16:10; 19:17), மற்றும் எங்கும் உண்மை (எபிரெயர் 3:2) உடையவர்களாய் நீங்கள் இருக்கும்போது தேவன் நிச்சயம் உங்களை பரிபூரணமாக தமது வாக்கின்படி ஆசீர்வதிப்பார் (நீதி. 28 : 20).

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## 7. அற்புத அடையாளங்கள் தாராளமாய் நடைபெற்றன

தொடர்ச்சி

**இன்று**

பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் அற்புத அடையாளங்களில் நம்பிக்கையிழந்த நிலையில் இருக்கின்றனர். சபை தலைவர்களும், சபை போதகர்களும் அவர்களுக்கு பயிற்சியளிக்கும் இறையியல் கல்லூரிகளுமே இந்த நிலைக்குக் காரணம்.

**போதனைகள் மாறிவிட்டன**

1. இயேசுவும், அப்போஸ்தலரும் அற்புதங்களைச் செய்தனர் என்பது உண்மைதான். ஆனால் இது இக்காலத்திற்கு உரியதல்ல என்று நம்பி அதையே பிரசங்கிக்கின்றனர், போதிக்கின்றனர்.
2. சிறப்பு வரம் பெற்றவர்கள் மூலம் மட்டுமே அற்புதம் நடக்கிறது என்ற நம்பிக்கை ஆழமாய் பதிந்துவிட்டது.
3. எல்லாப் போதகர்களுக்கும் அற்புத அடையாளங்களைச் செய்யும் வரம் இல்லை என்று நம்புவதால் பெரும்பான்மையான போதனைகளை வியாதியஸ்தருக்காக ஜெபிப்பதில் அற்புதத்தை எதிர்பார்ப்பதில்லை. அப்படியே ஜெபித்தாலும் ஏதோ கடமைக்காக ஜெபிக்கின்றனர்.
4. மருத்துவமும், டாக்டர்களும் பெருகிவிட்ட இந்தக் காலத்தில் வியாதியஸ்தருக்காக ஜெபிப்பதில் பயனில்லை என்று பலர் நம்புகின்றனர்.
5. வியாதி இயற்கையாக வருகிறது. இதற்கு ஜெபிக்கவேண்டிய அவசியமில்லை என்று பலர் உணருகின்றனர்.

**ஆனால்....**

இன்றும் அற்புத அடையாளங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஜெபத்தினால் இன்றும் வியாதிகள் சுகமாகின்றன. பிசாசுகள் துரத்தப்படுகின்றன. மரித்தோர் உயிரோடு எழுப்பப்படுகின்றனர். ஊக்கமான ஜெபமும், உபவாச ஜெபமும், தெய்வீக வல்லமை வெளிப்படும் வாழ்வும், அற்புதங்களைக் குறித்து ஆழமான விசுவாசமும் இருந்தால் இன்றும் யாரைக் கொண்டும் அற்புதங்களைச் செய்ய இயேசு வல்லவர்.

## 8. ஜெபம், தேவ வசனம், பிரசங்கம் தலைவர்களின் முன்னுரிமை

**அன்று**

ஆதி திருச்சபை வளர்ந்து வந்தபோது நிர்வாகப் பிரச்சனை எழுந்தது. சபையிலிருந்த விதவைகளுக்கு சரியான நேரத்தில் உணவு கொடுக்கப்படவில்லை என்று சலசலப்பு ஏற்பட்டது. உடனே அப்போஸ்தலர் துரிதமாக செயல்பட்டனர். சாட்சியுள்ள ஏழுபேரை தெரிந்துகொள்ளுங்கள். அவர்கள் இந்தப் பிரச்சனையை

தீர்த்து வைக்கட்டும். ஆனால் நாங்கள் ஜெபத்திற்கும், தேவ வசனத்தைப் போதிப்பதற்கும் எங்கள் நேரத்தை செலவிடுகிறோம்.

நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம். (அப். 6:4).

ஆதி சபை தொடர்ந்து வளர்ந்ததற்கும், அற்புத அடையாளங்கள் நடந்ததற்கும் இதுவே காரணம். அழைக்கப்பட்ட ஊழியத்தை விட்டுவிட்டு வேறு வேலைகளில் ஈடுபடுவதால் ஏற்படும் ஆபத்துக்களை இனம் கண்டுகொள்ள வேண்டும். திருச்சபை வளர்ந்து வரும்போது பல தேவைகள் உருவாகும். எந்தந்த வேலைக்கு எந்தந்த ஆட்களை நியமிக்க வேண்டும் என்று போதகர்கள், ஸ்தாபனத் தலைவர்கள் ஜெபித்து அதற்கென ஆட்களுக்கு பயிற்சி கொடுத்து நியமிக்க வேண்டும். பந்தி விசாரணை செய்ய, சாப்பாட்டுக் காரியங்களை கவனிக்க அப்போஸ்தலர்கள் தேவையில்லை. அதற்கென திறமையுள்ள விசுவாசிகள் சபையில் இருந்தார்கள். அவர்களுக்கு அந்த பொறுப்பை கொடுத்தபோது பிரச்சனை தீர்ந்தது. அப்போஸ்தலர் அதிகமாய் ஜெபித்தனர். தேவ வசனத்தை வல்லமையோடு பிரசங்கித்தனர். பாவிகள் மனந்திரும்பினர், வியாதிகள் சுகமாயின. அற்புதங்கள் நடந்தன. சபைகள் வளர்ந்தன. புதிய சபைகள் கட்டப்பட்டன. உபதேசப் பிரச்சனைகள் வந்தபோது கூடி ஜெபித்து நல்ல தீர்மானங்களை எடுத்து சபைகளுக்கு அறிவித்தார்கள். அன்று அறியப்பட்ட முழு உலகத்திற்கும் நற்செய்தி பரவிற்று.

### இன்று

இன்றுள்ள சபை போதகர்கள், ஸ்தாபன தலைவர்களில் பலர் ஜெபத்திலும், தேவ வசனத்தைப் போதிப்பதிலும் பின் தங்கியுள்ளனர். ஆரம்ப காலத்தில் உற்சாகமாக ஜெபித்தனர். வசனத்தை வல்லமையோடு பிரசங்கித்தனர். சபை வளர ஆரம்பித்தவுடன் இவர்களுடைய ஜெப வாழ்வு பாதிக்கப்பட்டுவிட்டது. இதற்கு பல குறுக்கீடுகள் உள்ளன.

### நிர்வாகக் குறுக்கீடு

### சபை போதகர்களை எடுத்துக்கொள்வோம்

சபையில் சில நூறுபேர்கள் சேர்ந்துவிட்டார்கள். இவர்களை வீடுவீடாகச் சென்று சந்திப்பதிலும், இவர்களின் குடும்ப பிரச்சனைகளுக்கு ஆலோசனை சொல்லுவதிலும் சபையின் பல்வேறு ஊழியங்களை நிர்வகிப்பதிலும் இவருடைய நேரம் முடிந்துவிடுகிறது. இப்போதும் ஜெபிக்கிறார்கள், தேவ வசனத்தைப் போதிக்கிறார்கள், ஆனால் ஆரம்ப நாட்களிலிருந்த நிலையிலிருந்து தாழ்ந்துவிட்டார்கள்.

### ஸ்தாபனத் தலைவர்களை எடுத்துக்கொள்வோம்

சபைகள் பெருகிவரும் நிலையில் நிர்வாகத்திற்கு அதிக நேரம் தேவைப்படுகிறது. எனவே இவர்கள் அலுவலக வேலையில் அதிக நேரம் செலவு செய்கின்றனர். கடிதங்கள் எழுதுவதிலும், போதகர்களை சந்திப்பதிலும், சபைகளை சந்திப்பதிலும், சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதிலும், மாநாடுகள் நடத்துவதிலும் இவர்களுடைய காலம் முடிகிறது. ஜெபம் பண்ணுவதற்கும், தேவ வசனத்தைப் போதிப்பதற்கும் சிறிது நேரம் எடுக்கின்றனர். ஸ்தாபனத் தலைவர் என்றாலே கல்வெட்டை திறப்பதற்கும், ஆலயத்தை பிரதிஷ்டை செய்வதற்கும், மாநாடுகளை நடத்துவதற்கும் உரியவர்கள். ஆனால் எழுப்புதல் கூட்டங்களில் பிரசங்கிக்க வேறு பிரசங்கியார்கள் தேவை என்று உணரப்படுகிறது. தலைவர்

என்றாலே, நல்ல பிரசங்கியார் அல்ல என்ற நிலையும் பல ஸ்தாபனங்களில் காணப்படுகிறது. ஆனாலும் அவருடைய தலைமைத்துவத்திற்கு மதிப்புக்கொடுத்து அவரை அழைப்பார்கள்.

ஸ்தாபனத் தலைவர்கள் ஜெபத்திற்கும், தேவ வசனத்தை போதிப்பதற்கும் மட்டுமே நேரம் எடுத்தால் அவர் மூலம் எழுப்புதல் உண்டாகும், சபைகள் வளரும், புதிய சபைகள் கட்டப்படும்.

## சமுதாயப் பணியில் அதிக நேரம் செலவிடும் போதகர்கள்

பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் நடத்துவது அவசியமே, அநாதை விடுதிகள், மருத்துவமனைகள் நடத்துவது அவசியமாயிருக்கலாம். இதற்கென்று தகுதி பெற்ற விசுவாசிகள் ஏராளமுண்டு. இப்படிப்பட்ட சேவைகளுக்கு அதற்கென்று ஆர்வமும், தரிசனமும், தகுதியும், கல்வியுமுள்ளவர்களை நியமிக்க வேண்டும். ஆனால் அநேக போதகர்கள் சமுதாய சேவையை மையமாகக் கொண்டு ஊழியம் செய்கின்றனர். சபை ஊழியம் அவர்களுக்கு முக்கிய ஊழியமல்ல, அதற்கான காரணங்களில் பிரதானமானது, சமுதாயப் பணிக்குத் தான் வெளிநாட்டு உதவி அதிகம் கிடைக்கிறது என்பது உண்மை. எனவே இடைவிடாமல் ஜெபித்து, தேவ வசனங்களை வல்லமையோடு போதித்த போதகர்களும், சபைத் தலைவர்களும் இவ்விதப் பணியில் ஈடுபட்டு வல்லமை இழந்து காணப்படுகின்றனர். பணம் இருக்கிறது, ஆனால் தேவ வல்லமை இல்லை.

சிறந்த பிரசங்கியாராயிருந்த இவர்கள் வெளிநாடுகளில் வல்லமையாய் பிரசங்கிப்பதை விட்டுவிட்டு தங்கள் தேவைகளைச் சொல்லி பணம் சேகரிப்பதால் இவர்களை சிறந்த போதகர்களாக ஏற்றுக்கொள்ளாமல் பணம் சேகரிக்க வந்தவராகவே ஏற்றுக்கொள்கின்றனர். நல்ல பிரசங்கம் பண்ணினால் பணம் கிடைக்காது, தேவைகளைச் சொன்னால் பணம் கிடைக்கும் என்று இவர்களும் தங்கள் ஊழியப்பாணியை மாற்றிக் கொள்கின்றனர். இந்தியாவிலிருந்து ஒரு பிரசங்கியார் வந்திருக்கிறார் என்று கேள்விப்படும் வெளிநாட்டவருக்கு பணம் சேகரிக்க வந்திருப்பார் என்றே எண்ணுகின்றனர். இந்த நிலை இப்போது மாறி வருவதற்காக கர்த்தரைத் துதிக்கின்றேன்.

தேசத்தை அசைக்கத்தக்க வல்லமையும், வரமும் பெற்ற அநேகர் பணத்தைச் சேகரிப்பதிலும், சொத்துக்களைப் பெருக்குவதிலும் ஈடுபட்டு இந்திய எழுப்புதலுக்கு சம்பந்தமற்றவர்களாகவே செயல்பட்டு ஓய்வு பெற்றார்கள். இன்னும் பலர் ஓய்வுக்கு நேரே சென்று கொண்டிருக்கின்றனர்.

## அரசியலில் ஈடுபட்டு அழைப்பை இழத்தல்

ஆதி அப்போஸ்தலர் தங்கள் பதவியைக் குறித்து கவலைப்படவில்லை. வசதிகளைப் பெருக்குவதில் நாட்டம் கொள்ளவில்லை. அவர்கள் இரவும் பகலும் ஜெபித்து, வல்லமையோடு ஊழியம் செய்தனர். இன்று பதவி ஆசையும், பண ஆசையும் ஆட்டிப் படைப்பதால் இயேசுவின் திருச்சபையை அரசியல் கட்சியாக்கி, அதில் தங்கள் பதவியை தக்கவைத்துக்கொள்ள படாதபாடுபடுகின்றனர். பணம் கொடுத்தாகிலும் பதவிக்கு வர முயலுகின்றனர். ஆட்களை பிரியப்படுத்தி, மேலே உயர முயற்சிக்கின்றனர். அரசியல் கட்சிகளுக்குள்ள சகல தில்லுமுல்லுகளும் சபைக்குள் சாதாரணமாய் உலாவி வருகின்றன. இந்த நிலை மாற கர்த்தர் உதவி செய்வாராக!!...



# நீங்களும் பைபிளை வாசிக்கலாம்

## You too can read the Bible

**Rev. Dr. L. ஜெயபாலன்**

மண்டல தலைமைப் போதகர், திண்டுக்கல் மண்டலம்

இன்று நீங்கள் பைபிளை வாசித்தீர்களா?

நான் சிறுபிள்ளையாக இருந்தபொழுது, எனது பெற்றோர் பைபிளிலுள்ள வரலாறுகளையும், சங்கீதங்களையும் கற்றுக்கொடுத்தார்கள். நான் ஆரம்பத்தில் பிற நூல்களிலுள் கதைகளை வாசிப்பதில் ஆர்வம் கொண்டேன். 1956-ல் தினத்தந்தியில், கன்னித்தீவு (சிந்துபாத் லைலா) என்ற கார்ட்டூன் கதையை ஆர்வமாக வாசிப்பதுண்டு. பின்னர் நூலகம் சென்று, சிறுகதைகள், அம்புலிமாமா போன்ற நூல்கள் வாசிக்க ஆரம்பித்தேன். 1964-ம் ஆண்டு மே 12-ம் தேதி பெங்களூரிலுள்ள இறையியல் கல்லூரிக்கு படிக்க சென்றபொழுது தினமும் பழைய ஏற்பாட்டில் ஒரு அதிகாரம், புதிய ஏற்பாட்டில் ஒரு அதிகாரம் என வாசிக்க ஆரம்பித்து, 4 வருடங்களில் படிப்படியாக 3,4,5 அதிகாரங்கள் என ஆரம்பித்து, 4 வருட இறையியற் படிப்பில் மூன்று தடவை முழு பைபிளையும் படித்து முடித்தேன். எனது ஆவிக்குரிய அறநெறி அனுதின வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. ஒவ்வொரு சமயத்தை சேர்ந்த நூல்களிலும் ஆன்மீகமும் அறநெறிகளும் காணப்படுகின்றது. இன்று பைபிளை 77வது தடவை வாசிக்கின்றேன்.

போன இதழில் பைபிள் எழுதப்பட்ட மொழி, 119-ம் சங்கீதம் போன்றவைகளிலிருந்த மிக முக்கியமான காரியங்கள். உங்களது வாழ்க்கைக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன். 119-ம் சங்கீதம் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

### (1) கடவுளுடைய வார்த்தையின் அட்டவணை

### The Briefing of God's Word

இப்பகுதியில் கடவுளின் வார்த்தைகளைக் குறித்து வேதம் (Law) 119:1; சாட்சிகள் (Testimonies) 119:2; கட்டளை (Precepts) 119:4; பிரமாணங்கள் (Statutes) 119:5; கற்பனை (Commandments); நியாயங்கள் (Judgements) 119:7; வசனங்கள் (வார்த்தை) (Speech or utterance )119:9; நியாயத்தீர்ப்புகள் (Ordinances) 119:13.

### (2) கடவுளுடைய வார்த்தையின் ஆசீர்வாதங்கள்

### The Blessing of God's Word

- இது ஒருவரை சுத்திகரிக்கிறது (119:9). கடவுளின் வார்த்தைக்கு எதிராக பாவம் செய்யாமல் இருக்க உதவுகிறது (It forbids us from sinning against Gods Word). வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னை காத்துக்கொள்கிறதினால்தானே.

- **நமது தேவைகளுக்கு கடவுளிடமிருந்து உரிமை பாராட்ட உதவுகிறது (119:49)**

"நீர் என்னை நம்பப்பண்ணின வசனத்தை உமது அடியேனுக்காக நினைத்தருளும்" மனிதன் சொல்லுவான் செய்ய மாட்டான். செய்வான் சொல்லமாட்டான். கடவுளோ எதைச் சொல்வாரோ அதையேச் செய்வார். எதைச் செய்வாரோ அதையே சொல்லுவார். மனிதனையும் அவனுடைய வார்த்தையையும் பிரித்துவிடலாம். கடவுளையும் அவருடைய வார்த்தையையும் பிரிக்க முடியாது. 1986-ம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் (Netherlands) என்ற நகருக்கு காலஞ்சென்ற டாக்டர் பில்லி கிரகாம் மாநாட்டிற்கு சென்றிருந்தேன். அங்கு வந்து எங்களுக்கு போதித்த ஒரு தேவ மனிதர் கீழ்கண்டவாறு கூறினார்.

- கடவுள் உங்களிடம் இடைப்பட்ட ஒரு வசனத்தை நினைவு கூறுங்கள்.
- கடவுள் உங்களுக்குச் செய்த ஒரு அற்புதம்.
- கடவுள் உங்களுக்கு செய்த மறக்க முடியாது காரியம் (இரட்சிப்பு).

இன்று மூன்று காரியங்களை நினைவு கூர்ந்து நான்காவது அற்புதத்தை எதிர்பாருங்கள். இரட்சிப்புக்கு (பாவ மன்னிப்பு) அடுத்ததாக, கடவுள் உங்களிடம் பல வசனங்கள் மூலம் பேசியிருக்கலாம் அதிசயங்கள் செய்திருக்கலாம். இதன் அடிப்படையில் அடுத்த அற்புதத்தையும் எதிர்பாருங்கள்.

- **ஒருவரை பூரணமான நிலையில் வழிநடத்துகிறது** (119:65). "கர்த்தாவே, உமது வசனத்தின்படி உமது அடியேனை நன்றாய் நடத்தினீர் கடவுளின் வசனம்" என் கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது என்று சங்கீதக்காரன் சொல்கிறார். பின்மாற்ற நேரத்தில், போராட்டத்தின் வேளையில், "உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்" சங். 119:25 என கூப்பிடலாம். கர்த்தர் தமது வழிகளில் (119:37), அவருடைய நீதியால், (119:40) அவருடைய கிருபையால் (118:88). கட்டளைகளால் உயிர்ப்பிக்கின்றார் (119:93). எனவே தான், "நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்க மாட்டேன்" என வாசிக்கின்றோம்.

- **மனதில் சமாதானத்தைத் தருகின்றது** (119:165). ஒருவர் மெய்சமாதானத்தை கிறிஸ்தேசுவினால், அவருடைய வார்த்தைகளினால் பெற்றுக்கொள்ள, பரம பிதாவானவர், பரிசுத்தாவியின் மூலம் உதவி செய்கின்றார். "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு, அவர்களுக்கு இடறலில்லை"

- **சந்தோஷத்தை தருகின்றது** (119:174). "உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி". "எத்தனை கோடி பணம் இருந்தாலும், நிம்மதி வேண்டும் வீட்டிலே" என்ற சினிமா பாடல் பொது ஒலிபெருக்கியின் மூலம் எனது காதுகளில் சிறுவனாயிருக்கையில் தொனித்ததுண்டு. பணமோ, பட்டமோ, பதவியோ, புகழோ மெய்யான சமாதானத்தை தருவதில்லை. இதை தான் சாலமோன் இராஜா பிரசங்கியில் 2-ம் அதிகாரத்தில் விவரமாகக் கூறுகின்றார். வீடுகள், தோட்டங்கள், குளங்கள், வேலைக்காரர்கள், வெள்ளி, பொன், இசை, வாத்தியங்கள், உணவுகள் எல்லாம் சாலமோனுக்கு சந்தோஷத்தை தரவில்லை. என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லா பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன். இதோ எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது, சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை? பிரசங்கி. 2:11. எனவே ஒருவர் வேத வசனத்தின்படி நடந்தால் அவருக்கு மிகுந்த சமாதானம் உண்டென்பதில் சந்தேகமில்லை.

- **வீண் சிந்தனைகளை தவிர்க்க உதவுகிறது** (119:113). நல்ல சிந்தனைகள், தனக்கும் பிறருக்கும் மிகுந்த பயனைத் தரும். வீண் சிந்தனைகள், பார்வையில், வார்த்தைகளில், செயலில் வெளிப்படும்போது அது எல்லோரையும் பாதிக்கும். நரம்பு மண்டலத்தை உடலை பாதிக்கும். "வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்".

**சிந்தனைகளை சிறைபடுத்த வேண்டும் (Captivate) :** எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் (2 கொரி. 10:5).

**சிந்தனைகளை சிலுவையிலறைய வேண்டும் (Crucify) :** "கிறிஸ்துவையுடையவர்கள், தங்கள் மாம்சத்தையும். அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலா. 5:24).

**சிந்தனைகளை சீர்படுத்தவேண்டும் (Cultivate):** "கிறிஸ்தேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலி. 2:5).

கடவுள் தமது வார்த்தையின் மூலம் உங்களுடன் பேசுவாராக!

பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற, குடும்ப ஆலோசனைகளுக்கு 94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

# A.G. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி

(An ATA Accredited College)

மதுரை - 625 016

Email : agtbc1948madurai@gmail.com Website : www.agtbc.org

## I. Residential Studies

### 1. Master of Divinity (M.Div.)

**Medium** : English | **Duration** : 3 Years

**Eligibility** : Any Degree from Recognized University (10+2+3)

### 2. Bachelor of Theology (B.Th.,)

**Medium** : English and Tamil | **Duration** : 3 Years

**Eligibility** : +2 Pass (10+2)

### 3. Diploma in Theology (Dip. Th.,)

**Medium** : Tamil | **Duration** : 2 Years

**Eligibility** : S.S.L.C. (X Std Pass)

## II. Modular Studies

### 1. Master of Divinity (M.Div)

**Medium** : English | **Duration** : 3 Years (For Men and Women)

Eligibility: Any Degree from Recognized University (10+2+3)

B.Th Degree or its equivalent

### 2. Bachelor of Theology (B.Th)

**Medium** : Tamil | **Duration** : 3 Years

Eligibility: S.S.L.C. and Diploma in Theology (10+Dip.Th) (Only for Ministers)

## III. Extension Studies

### 1. Diploma in Theology (Dip.Th)

**Medium** : Tamil | **Duration** : 2 Years

Eligibility: S.S.L.C. (X Pass)

---

**விண்ணப்ப படிவத்திற்கு**

**Download Application Form : www.agtbc.org**

---

தொடர்பு:

*Director of Residential Studies*

**AG Tamilnadu Bible College**

Post Box-1, Bye Pass Road, Madurai - 625 016

Cell : 96982 55027, 94430 70974, Ph: 0452 2601940.



# சங்கீத புஸ்தகம்
# ஆசாபின் சங்கீதங்கள்


Rev. Dr. சாமுவேல் ராஜ் R.

All India National Director, Global University


வேதாகமத்திலுள்ள 150 சங்கீதங்களில் 12 சங்கீதங்கள் ஆசாப் எழுதியவை; அவை 50-ம் சங்கீதம் மற்றும் 73 முதல் 83 வரையுள்ள சங்கீதங்கள் ஆகும்.

**யார் இந்த ஆசாப்?**

தேவாலயம் கட்டப்படுவதற்கு முன்பு, ஆசரிப்புக் கூடாரத்தில் கர்த்தருடைய பெட்டிக்கென தனியிடம் கொடுத்து, அதனை நிலைபெறச் செய்தான் தாவீது. அப்போதே கர்த்தருடைய ஆராதனைகளில் சங்கீத சேவையை நடத்துவதற்கென லேவியர் ஏற்படுத்தப்பட்டனர். தங்கள் தங்கள் முறை வரும்போது இவர்கள் பாடல்களை நடத்தினர். இவர்களில் மூன்றுபேர் தலைமைப்பாடகர்கள், அவர்களில் ஆசாப் பிரதானமானவன்.

இந்த லேவியர் கர்த்தரைத் துதிக்கவும், பூரிகைகளையும், கைத்தாளங்களையும் தேவனைப் பாடுவதற்குரிய கீதவாத்தியங்களை தொனிக்கவும் ஏற்படுத்தப்பட்டனர். இந்த லேவியரும், ஆசாபும் பாடகருக்குரிய மெல்லிய வஸ்திரந்தரித்து கைத்தாளங்களையும், தம்புருகளையும், சுரமண்டலங்களையும் பிடித்துத் தேவாலய ஆராதனைப்பாடல்களை நடத்தினர்.

ஆசாப், இந்த பாடகராகிய லேவியரை விசாரிக்கிறவனாக ஏற்படுத்தப்பட்டவன். சாலமோன் தேவாலயத்தைக் கட்டிப் பிரதிஷ்டை செய்தபோதும் அங்கு பாடியவர்களில் ஆசாபும் ஒருவனாயிருந்தான் (1 நாளா. 6:39; 2 நாளா. 5:12).

தாவீது அரசனால் அவையிலும், ஆலயத்திலும் ஆராதனை தலைவனாய் ஏற்படுத்தப்பட்ட ஆசாப், சாலமோனுடைய ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்து சேவை செய்தான். தன்னுடன் தேவாலயத் திருப்பணிகளில் இருந்துகொண்டு மலிவான / மட்டமான ஈனமாய் செயல்பட்ட ஆசாரியர்களையும் லேவியரையும் ஆசாப் தனது சங்கீதங்களில் சாடுகிறான் (சங். 73). அன்று அறியப்பட்ட புறஜாதிய மார்க்க ஆசாரியரிலிருந்தும் தரம் தாழ்ந்து செயல்பட்ட யெகோவா தேவனுடைய அன்றைய ஊழியரைவிட ஆசாப் தரம் சிறந்து பரிசுத்தமான பாடகனாய் தனியிடம் பிடித்திருந்தான்.

**ஆசாபின் சங்கீதங்களின் சிறப்பு :**

**கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு** : ஆசாபின் 12 சங்கீதங்களுமே ஒட்டுமொத்தமாக ஒரே ஒரு கருத்தினை அடிப்படையாக கொண்டதாயிராமல், அந்தந்த சங்கீதங்கள் தனித்தனி கருத்துக்களை நமக்குத் தருகின்றன. எனினும் பிரதானமாக, கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை மீறி நடப்போர்மேல் **ஆண்டவருடைய நியாயத்தீர்ப்பு** வருவதைக்கண்டு, அதற்காக புலம்பி அழ சமுதாயப் புலம்பலாகவும், தனிமனிதனுடைய புலம்பலாகவும் ஆசாபின் சங்கீதங்கள் சிறப்பு பெற்றுள்ளன.

"**சேலா**"என்ற பதம் சங்கீதப் புத்தகத்தில் 71 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதிலும், ஆசாபின் 12 சங்கீதங்களில் மட்டும் 9 முறை வருகின்றது. "**சேலா**" என்பதற்கு மிகத்தெளிவான விளக்கம் தெரியாவிட்டாலும் "ஒரு கருத்துக்கோர்வையின் முடிவு" "பாடிக்கொண்டேயிருக்கும்போது இடையில் பாடலை நிறுத்திப் பின்னும் தொடர்ந்து

பாடுதல்", "இரு சரணங்களிடையே இசை வாசிக்க இடம் கொடுத்தல்", "இப்பொழுது சொல்லப்பட்ட கருத்து உறுதியானது". எனப் பல பொருள்களை கொடுக்கும். எனவே ஆசாபின் சங்கீதங்கள் அனைத்தும் நிறுத்தி, நிதானித்துப்பாடப்பட வேண்டியவை என்றும், அவற்றில் வரும் கருத்தாழங்கள் என்றென்றும் உறுதியானவை என்றும் பொருள்படவே **''சேலா''** என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம். உதாரணமாக, "தேவனே நியாயாதிபதி" (50:6) என்ற சொற்றொடரை அடுத்து "சேலா" என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்பொருள் என்னவெனில் "இப்பொழுது சொல்லப்பட்ட கருத்து உறுதியானது, என்றென்றைக்கும் அதுவே உண்மை" என இங்கு பொருள்படும்.

**மஸ்கீல் என்னும் சங்கீதங்கள்** போதக சங்கீதமாக அறியப்பட்டவை ஆகும். சங்கீதங்களில் துதியின் சங்கீதங்கள், புலம்பலின் சங்கீதங்கள், நன்றிசெலுத்தும் சங்கீதங்கள் ஆகிய சங்கீதங்களை வகைப்படுத்தலாம். இவையெல்லாம் தேவனை நோக்கிச்செய்யும் ஆராதனையாகவும், அழுது புலம்புவதாகவும், நன்றி பெருக்குடனும் பாடப்பட்டவை ஆகும். ஆனால் மஸ்கீல் என்னும் போதக சங்கீதங்களோ, தியானத்துடன்கூடிய போதனையாகப் பாடப்பட்டவை. ஆசாபின் சங்கீதங்களில் 74,78 ஆகியவை மஸ்கீல் என்னும் போதக சங்கீதங்களாகும்.

கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொள்ளத் தவறிய மக்கள் மனந்திரும்ப வேண்டும் எனவும், நியாயத்தீர்ப்பினிமித்தம் கர்த்தரின் நியாயப்பிரமாணம் கைக்கொள்ளப்பட வேண்டும் எனவும் போதனையாக பாடப்பட்டது, சங்கீதம் 78. இது ஆசாபின் ஆழமான பக்திப்பரவசத்தை நமக்குக் காட்டுகிறது.

### ஆசாபின் சங்கீதங்களின் சிறு விளக்கம்

ஆசாப் பாடிய சங்கீதங்களில் இரண்டு சங்கீதங்களைப் பற்றி மட்டும் இங்கு காண்போம்.

## சங்கீதம் 50

### மூன்றுவித ஆராதனைகள்

ஒவ்வொரு ஏழாம் ஆண்டும் இஸ்ரவேலருக்கு ஓய்வின் ஆண்டு எனலாம். இது விடுதலையின் வருடம் என்றும் அழைப்பர். இந்த விடுதலையின் ஆண்டில் கூடாரப்பண்டிகையில் கூடி வந்திருக்கிற ஜனங்களுக்குக் கர்த்தருடைய நியாயப்பிரமாணப் புத்தகத்தை வாசிக்க வேண்டும் என்று மோசே கட்டளையிட்டிருந்தான் (உபா.31:9-31). எஸ்றா, நெகேமியா காலத்தில் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஜனங்களுக்கு இப்படி நியாயப்பிரமாணப் புத்தகம் வாசிக்கப்பட்டது (நெகே.8). அப்படி வாசிப்பதற்காக இந்த சங்கீதம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது வேதபண்டிதர்களின் கணிப்பு. இந்த சங்கீதத்தில், கர்த்தர் நியாயாதிபதியாக சித்தரிக்கப்படுகிறார். "தேவனே நியாயாதிபதி" (வசனம் 6). மூன்றுவித ஆராதனைகளை ஒப்பிடும் ஆசாப், நியாயாதிபதியாகிய கர்த்தர் தவறாக ஆராதிக்கிறவர்களை நியாயந்தீர்ப்பார் எனக்கூறுகிறான்.

### முதலாவது பிரிவினர்

இவர்கள் பெயருக்காக கடமை கழிக்க ஆராதிப்பவர்கள். வேதம் சொல்லுகிறபடி பலிகள், அந்திப்பலிகள், காணிக்கைகள் என ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி ஆராதிக்கிறவர்கள். ஆனால் அவர்கள் இருதயமோ அந்த ஆராதனையில் ஒன்றவில்லை. மரபுகளுக்குக் கட்டுப்பட்டு, ஒழுங்குமுறை சார்ந்து ஆராதிக்கும் பெருங்கூட்டமாக இன்றைய பெயர் கிறிஸ்தவ ஆராதனைக்கு இவர்களை ஒப்பிடலாம். ஆவியும் உண்மையில்லாத ஆராதனை இது! இவர்கள் இருதயமற்ற ஆராதனைக்காரர்கள். எனவே இவர்களை ஆசாப் கடிந்துகொள்ளுகிறான் (வச. 7-15).

### இரண்டாவது பிரிவினர்

இவர்கள் மாய்மாலமாய் ஆராதிக்கிறவர்கள்; தங்கள் பாவங்களை ஆராதனை என்னும் திரைகொண்டு மறைக்கும் பாதகர் இவர்கள். மாய்மாலக்காரரான இவர்களும் நியாயந்தீர்க்கப்படுவர் (வசனம் 16:21).

### மூன்றாவது பிரிவினர்

இவர்கள் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கும் பக்தர்கள். இவர்களுக்கு தேவனுடைய இரட்சிப்பு உண்டு என்ற நம்பிக்கை வார்த்தைகளுடன் முடிகிறது. இந்த சங்கீதம் (வசனம் 22-23). ஆராதனை வீரனாகிய ஆசாப், ஆராதனை யாருக்குரியது?, எப்படிச்செய்ய வேண்டும்? எது தவறானது? எது சரியானது? என்பனவற்றை மிக நேர்த்தியாக இந்த சங்கீதத்தில் குறிப்பிடுகிறான். இன்றைய ஆராதனை தலைவர்கள் (Worship Leaders) எது சரியான ஆராதனை, எது வழிவிலகிச் செல்லும் தவறான ஆராதனை என்பதை நிதானித்து அறியவேண்டும்; தவறுகளை சுட்டிக்காட்டும் ஆசாப் போன்ற ஆராதனை வீரர்கள் இன்றைய அத்தியாவசியத் தேவையாகும். கர்த்தருக்கு மகிமையைக் கொண்டுவராத மௌன ஆராதனைகளும், மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டி, ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என உசுப்பேற்றும் ஆராதனைகளும் எச்சரிக்கப்பட்டு உண்மையான ஆராதனை செய்யப்பட வேண்டும் என்பது இன்றைய கிறிஸ்தவ சபைகளில் கவனம் செலுத்தவேண்டிய ஒன்றாகும்.

## சங்கீதம் 73

சங்கீத புத்தகம் கருத்துக் கோர்வையை அடிப்படையாகக்கொண்டு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

முதலாம் புத்தகம் ஆதியாகம சங்கீதங்கள் என்றும் (1-14), இரண்டாம் புத்தகம் யாத்திராகம சங்கீதங்கள் (42-72) என்றும், மூன்றாம் புத்தகம் லேவியராகம சங்கீதங்கள் (73-79) என்றும், நான்காம் புத்தகம் (90-106) எண்ணாகம சங்கீதங்கள் என்றும், ஐந்தாம் புத்தகம் (107-150) உபாகம சங்கீதங்கள் என்றும் பகுக்கப்பட்டுள்ளன.

அதில் ஆசாபின் 73-ம் சங்கீதம் லேவியராகம சங்கீதங்களில் முதல் சங்கீதமாக தரப்பட்டுள்ளது. பரிசுத்த ஸ்தலம் பற்றிய 17 சங்கீதங்களைக் கொண்ட லேவியராகம சங்கீதத் தொகுதியில் 11 சங்கீதங்களை ஆசாப் எழுதியுள்ளான். பரிசுத்த ஸ்தலம், ஆலயம், சபை சார்ந்தே வாழும் பாடகர்களுக்காய் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!.

துன்மார்க்கர் செழித்திருக்கும்போது, குற்றமற்ற நீதிமான் ஏன் துன்பப்படுகிறான்? என்பது காலாகாலமாகப் பதில் காண இயலாத ஒரு கேள்வியாகும் (சங்.37:49; யோபு 21; எரே.12; ஆபகூக் 1:3).

ஆசாபும் இந்தக் கேள்விக்கு விடைகாணாமல் திகைத்து நின்றான். எனினும் ஆராதனையில் பிரவேசித்தபோது அவனது சந்தேகங்களுக்கு விடை கிடைத்தது. திகைத்து நின்ற ஆசாபின் அனுபவங்களை ஐந்து நிலைகளில் இந்த சங்கீதத்தில் காண்கிறோம்.

அக்கிரமம், கொடுமை, சீர்கேடு, பொல்லாப்பு, பொய் ஆகிய அத்தனையும் சேர்ந்த செயலை “ஊழல்” என அழைக்கலாம். இவற்றில் சிக்குண்டு இதற்கு அடிமைப்பட்டு பரிசுத்த ஸ்தலத்தின் பணிவிடைகளையும் செய்து வந்த பாதகரைக் கண்ட ஆசாப், 27-ம் வசனத்தில் உம்மைவிட்டுத் தூரமாய் போகிறவர்கள், உம்மைவிட்டுச் சோரம்போகிறவர்கள் எனக்குறிப்பிட்டு, அவர்கள் நாசமடைவார்கள் என்றும், கர்த்தர் அவர்களைச் சங்கரிப்பார் என்றும் குறிப்பிடுகிறான். ஆனால் தன்னையோ, சுத்த இருதயமுள்ள இஸ்ரவேலனாக தேவனுடன் உடன்படிக்கைச் செய்தவனாக அடையாளப்படுத்திக் கொள்கிறான் (வசனம் 1). தான் கர்த்தரிடம் தன் நம்பிக்கையை வைத்திருப்பதாகக் கூறுகிறான் (வசனம் 28).

**1. பக்தனாகிய ஆசாப்** (வசனம் 1)

தேவனோடு உடன்படிக்கை செய்தவர்கள் இஸ்ரவேலர்; அதிலும் உபரியாக, ஆசாப் சுத்த இருதயமுள்ள பக்தன் ஆவான். தனக்கு எட்டாத உயரமான வாழ்க்கையின் மர்மங்களில் தன்னைச் சுற்றிலுள்ள உலகில் நடப்பவை அனைத்தும் அவனுக்கு மர்மங்களாகவே காணப்பட்டன. எனினும், அவன் சுத்த இருதயமுள்ள பக்தனாய் நிலைத்திருந்தான். எனவே, ஆசாப் பரிசுத்த ஸ்தலத்தில் சென்றபோது அவனுக்குப் புரியாத புதிர்கள் அப்பட்டமான வெளிச்சத்துக்கு வந்தன. தேவன் வெளிச்சத்தில் கற்றுக்கொடுத்த சத்தியத்தை ஒருக்காலும் இருளின் அந்தகார சூழ்நிலையில் சந்தேகப்படக்கூடாது என்னும் விலையேறப்பெற்ற சத்தியத்தை ஆசாப் இங்கு கற்றுக்கொள்ளுகிறான் என்பதை நாம் காண இயலும்.

**2. சந்தேகப்படும் ஆசாப்** (வசனம் 2-3)

துன்மார்க்கரின் செழுமையான வாழ்வைகண்டபோது, இது எப்படி சாத்தியமாகும் என சந்தேகம் கொள்ளும் ஆசாப், சறுக்கி விழுந்துவிடுவோமா என்னும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். பொறாமையும் அவனுக்குள் வந்துவிட்டது.

**3. போராடும் ஆசாப்** (வசனம் 4-14).

முந்தய அனுபவத்தைத் தொடர்ந்து தன்னைச் சுற்றி தான் காண்பதும், அதினிமித்தம் உள்ளம் குழம்பித் தவிப்பதுமான பெரும் போராட்டமே அவனுக்குள் நடந்தது. அவன் கண்ணாரக் கண்டது என்ன? இடுக்கன் இல்லாத துன்மார்க்கனின் வாழ்வு; அவர்களது உறுதியான பெலனும் ஆரோக்கியமான வாழ்வும், வருத்தமும், உபாதையும் இல்லா வாழ்க்கை. "மைதாசின் தொடுதல்போல" செல்வச்செழிப்பு, பெருகிக்கொண்டே செல்லும் ஆஸ்தி. இவைகளைக் கண்டபோது அவன் இருதயத்தில் உணர்ந்தது என்ன? எனது பரிசுத்த வாழ்க்கை வீணானதே, எனக்கோ தினந்தோறும் பீடைகளும் தண்டனைகளுமே, நான் உண்மையாய் ஊழியம் செய்வதும் பயனில்லையே என்ற குழப்பமான தவிப்பே அவனுள் மேலோங்கி நின்றது.

**4. ஆராதிக்கும் ஆசாப்** (15-22)

தான் கண்டவற்றையும், தான் கடந்து செல்லும் அனுபவங்களையும் உலகத்தாருடைய ஆலோசனைகளின் வெளிச்சத்தில் ஒப்பிட்டுப்பார்க்காமல், தேவனுடைய சமுகத்தில் சென்று விடைகாண முயற்சித்த ஆசாபுக்கு உண்மை எதுவென்று தேவன் காட்டிய சத்தியங்கள் தெளிவு வந்தன. தன்னைச் சுற்றியிருந்த சூழலுக்கும், பிரச்சனைகளுக்கும் ஒரு புதிய தெய்வீகக் கண்ணோட்டம் கிடைத்தது. ஆராதிக்கிறவனுக்கு எப்போதுமே தேவனுடைய மர்மங்கள் மறைவானவையல்லவே! தனது குழம்பிய மனதிற்கு தேவன் தந்த விளக்கங்கள் அவன் பக்தனாய் நிலைக்க உறுதியெடுக்கச் செய்தது.

**5. வெற்றி காணும் ஆசாப்** (23-28)

தனது மனக்குழப்பங்கள் மாறும்படி பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்த ஆசாப், புதிய பாடங்களைக் கற்றிருந்தான். தேவனோடு இன்னும் நெருக்கமானான். தேவனை பற்றிக்கொண்டு வாழ்வதற்கு உறுதியெடுத்தான். இப்பொழுது, ஆண்டவருடைய கிரியைகளையெல்லாம் சொல்லி வருவதற்கும், ஆண்டவர்மேல் தனது நம்பிக்கையை வைக்கிறான். இதுவன்றோ உண்மையான **வெற்றி!**

ஆசாப் பாடிய மற்ற பத்து சங்கீதங்களையும் வாசித்துத் தியானிப்பது ஆவிக்குரிய ஆழங்களை அறியவும், நமது வாழ்க்கை முழுவதற்கும் பயனுள்ளதாகவும் அமையும் என்பது நிச்சயமே.

# ஜெபத்தில் காணப்பட வேண்டிய ‘4’ எல்லாம்

‘‘எந்தச் சமயத்திலும், சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்” (எபே. 6:18).



இந்த வசனத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் வார்த்தை ‘சகல’ ‘எல்லா’ (All) என்பதாகும். இந்த ஒரு வசனத்தில் மட்டும் 4 வகையான ‘எல்லா’ (All) என்ற பொருள்படும் வார்த்தைகள் உள்ளது.

**1. எல்லா நேரத்திலும் (ALWAYS)**

உண்மையான விசுவாசி தொடர்ந்து எல்லா நேரத்திலும் ஜெப சிந்தனையோடு வாழ்கிறார். இதைத் தான் தெசலோனிக்கேயருக்கு எழுதும் நிருபத்தில் “இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்” (1தெச.5:17) என்று பவுல் எழுதுகிறார். ஆம் நாம் தேவனோடு உரையாடுதல் இடைவிடாமல் எப்போதும் இருக்கும் பழக்கமாய் இருக்க வேண்டும் (அப்.10:2;12:12). எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்று இயேசு கூறுகிறார் (லூக்கா 21:36).

**2. எல்லாவித ஜெபத்திலும் (ALL PRAYER)**

நம் வாழ்வே ஜெப வாழ்வாய் இருப்பதால், நம் ஜெபங்களும் பல வகைப்பட்டதாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவனின் ஜெபம் கிரமமாகவும், திட்டமிடப்பட்டதாகவும், குறிப்பானதாகவும் இருக்க வேண்டும். அவசர தேவைகளுக்கும் ஜெபிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். நம்முடைய ஜெபங்கள் சில துதிகள் நிறைந்ததும், ஆராதனையாகவும் மற்றும் பாவ அறிக்கை உள்ளதாகவும் இருக்கலாம். நாம் ஆவியோடு ஜெபிப்பதையும், உபவாசித்து ஜெபிப்பதையும், மன்றாடி ஜெபிப்பதையும், நன்றி செலுத்தி ஜெபிப்பதையும், பாவ அறிக்கை செய்து ஜெபிப்பதையும், போராடி ஜெபிப்பதையும், பயிற்சி செய்ய வேண்டும். இவற்றைத்தான் “எல்லாவித ஜெபத்தோடும்” என்று அப். பவுல் குறிப்பிடுகிறார்.

**3. எல்லாவித மன உறுதியோடும் (ALL PERSEVERANCE)**

இது நாம் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஜெபித்தல் என்பது இயல்பாக காணப்படுவதோ அல்லது எளிதான காரியமோ அல்ல. ஜெபிப்பதற்கு கடின உழைப்பும், விடாமுயற்சியும் தேவை. எல்லாவித மன உறுதியும் தேவை. நீங்கள் யாருக்காக ஜெபிக்கிறீர்கள்? எதற்க்காக ஜெபிக்கிறீர்கள்? சோர்ந்துபோகாமல் ஜெபியுங்கள். நாம் இடைவிடாமல், விடா முயற்சியுடன் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்துள்ளார் (மத்தேயு 7:7; லூக்கா 18:1-8).

**4. எல்லா பரிசுத்தவான்களுக்காகவும் (ALL THE SAINTS)**

எல்லோருக்கும் நம் ஜெபம் தேவை. குறிப்பாக மற்ற விசுவாசிகளுக்காகவும், பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபித்தல் வேண்டும். தேவனுக்கு மிகப் பெரிதானதோ, அல்லது அற்பமானதோ எதுவும் கிடையாது. நாம் சில நேரங்களில் மட்டும், சிலருக்காக மட்டும், சில வகை ஜெபங்கள் மட்டும் செய்கிறோம். ஆனால் தேவன் எல்லாவற்றிற்காகவும், எல்லோருக்காகவும், எல்லா நேரங்களிலும் நாம் ஜெபிக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

# தேவனுக்காக எரிந்து பிரகாசித்த விளக்கு




தோற்றம்
1.03.1950

மறைவு
8.02.2020

## Rev.A.எபனேசர் சத்தியவாசகம்

சங்கை.எபனேசர் சத்தியவாசகம் 1.03.1950 ஆண்டு பிறந்தார். இளம் பருவத்திலே தகப்பனை இழந்து விதவையான தாயின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார். 1972-ம் ஆண்டு தமிழ்நாடு வேதாகமக் கல்லூரியில் வேதாகமப் பயிற்சிக்காக சேர்ந்து தொடர்ந்து தென் ஆசியா வேதாகமக் கல்லூரியில் G.Th படித்து பட்டம் பெற்று சென்னை அயனாவரத்தில் சபை ஊழியத்தை ஆரம்பித்தார். 1976 ஆம் ஆண்டு லூயிசா ராணியை திருமணம் செய்தார். 1978ஆம் ஆண்டு மதுரையிலுள்ள தமிழ்நாடு வேதாகமக் கல்லூரிக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1983ம் ஆண்டு சரீரத்தில் பெலவீனப்பட்டு அதன் மத்தியிலும் தன்னுடைய B.D படிப்பை முடித்தார். கல்லூரியில் Dean of Student ஆகவும் Registrar ஆகவும் 21 ஆண்டுகள் ஊழியம் செய்தார். கர்த்தர் அவருக்கு கிளமண்ட், ஜெமிமா, கேரல், ஜோனத்தான் என நான்கு பிள்ளைகளை தந்தார். தனது வாழ்வில் சுமார் 50 ஆண்டுகள் அயராது கர்த்தருக்காக ஊழியம் செய்து வந்தார். இவர் தேசத்திற்காக ஜெபிக்கும் ஒரு நல்ல ஜெபவீரராக விளங்கினார். தன்னுடைய கணீர் வார்த்தையால் அநேக உள்ளங்களை கவர்ந்தவர். எல்லா ஸ்தாபனங்களிலும் சபை பாகுபாடின்றி ஊழியம் செய்து வந்தார். சபை சரித்திரத்தை குறித்து மிகவும் நேர்த்தியான புத்தகம் ஒன்றையும் எழுதியுள்ளார். தன்னுடைய ஊழிய ஆரம்ப நாட்களில் சகோ. ஜீவானந்தத்தோடு இணைந்து ஊழியம் செய்தார். இவர் நகைச்சுவை உணர்வோடு பேசும் திறமைமிக்கவர். சத்தியத்தை நேர்த்தியாக பகுத்து போதிக்கும் கிருபை பெற்றவர். இவரது அபிஷேகம் நிறைந்த ஊழியத்தால் தொடப்பட்ட தனிநபர்கள், ஊழியர்கள் அநேகருண்டு; பயன்பெற்ற சபைகள் அநேகமுண்டு. தன்னுடைய ஓட்டத்தை ஜெயமாக ஓடி, நல்ல போராட்டத்தை முடித்து 08.02.2020 அன்று காலை 8.00 மணியளவில் மகிமைக்குள் பிரவேசித்தார்.



## REGULAR FULL TIME COURSES

### முழு நேர பயிற்சி வகுப்புகள்

முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும் சகோதரர்களுக்கு

போதனை மொழி: தமிழ்

- இறையியல் பட்டப்படிப்பு
  (Bachelor of Theology) (ATA)
  தகுதி: 12ம் வகுப்பு காலம்: 3 ஆண்டுகள்
- இறையியல் டிப்ளோமா
  (Diploma in Theology) (ATA)
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்
- இறையியல் சான்றிதழ்
  (Certificate in Theology)
  தகுதி: 10ம் வகுப்புக்கு கீழ் காலம்: 2ஆண்டுகள்

# முறையான வேதாகம கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

**ADMISSION OPEN**

## EVENING PART TIME COURSES

### பகுதி நேர பயிற்சி வகுப்புகள்

For Both Men and Women

Classes: Monday, Thursday & Friday | 6:30 – 8:30 Pm

போதனை மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்

- MASTER OF ARTS IN CHRISTIAN MINISTRY (ATA)
  Eligibility: Any Degree | Duration: Two Years
  Medium of Instruction: English
- கிறிஸ்தவ ஊழியம் – முதுகலை (ATA)
  தகுதி: பட்டபடிப்பு காலம்: 2 ஆண்டுகள்
- கிறிஸ்தவ ஊழியம் – டிப்ளோமா
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்

For further information and application form, please contact
Rev. M. Sampath (Principal, MABC)
Mobile : +91 - 94442 87322

**MADRAS ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE**

No. 191 (New No. 6), Anna Salai,
Little Mount, Chennai – 600 015, TN.
Phone: 044 – 2235 1646 | 2235 3100
Email: mabc_edu@yahoo.com



# தமிழ் பிரதேச மிஷன் ஊழியம்

**Rev. எட்வின் பிரபாகர்**
(இயக்குநர், வடகிழக்கு இலாக்கா)

TAMIL DISTRICT MISSIONS
India and beyond...

வடகிழக்கு மிஷன் ஊழிய இலாக்கா சார்பில் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

“நீயோ... சுவிசேஷகனுடைய வேலையை செய், உன் ஊழியத்தை நிறைவேற்று” (2 தீமோ.4:5).

தமிழ் பிரதேச வடமாநில ஊழியங்களின் மூலம் வடகிழக்கு இலாக்காவின் 15 மாநிலங்களில் (ஆந்திரா, தெலுங்கானா, சட்டீஸ்கர், ஒரிசா, ஜார்கண்ட், பீகார், மேற்கு வங்காளம், சிக்கீம், அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா, மிசோராம், மணிப்புர், நாகலாந்து, அருணாச்சலபிரதேசம், அந்தமான் தீவு) நமது மிஷன் ஊழியங்கள் தேவ கிருபையால் ஆசீர்வாதமாய் வளர்ந்து வருகிறது.

அப்போஸ்தலானாகிய பவுல் தீமோத்தேயுக்கு எழுதும் ஆலோசனையின்படி மேலே குறிப்பிடப்பட்ட மாநிலங்களின் மிஷன் ஊழியத்திற்காக ஜெபத்தோடு சுவிசேஷ வேலையை பாரத்தோடு நாம் கடந்து போய் வட மாநிலங்களில் நிறைவேற்ற வேண்டும்.

### 1. வடமாநிலங்களில் சுவிசேஷம் பிரசங்கிப்பது நமது பிரதான பணி

மத்தேயு 24:14-ன் படி சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும். இயேசு சொன்னபடியே பூலோகமெங்குமுள்ளவர் களுக்கும் சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் பணி நம் ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்ட பணியாகும். மேற்கூறப்பட்ட மாநிலங்களில் போதகர்களாக, சபை மக்களாக நமது உத்தரவாதத்தை நிறைவேற்ற ஜெபத்தோடும், பாரத்தோடும் பணி செய்து முடித்திட எழும்பி வர அழைக்கிறோம்.

மாற்கு 16:15-ல் இயேசு பரமேறி போவதற்கு முன் நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்று செய்யப்பட வேண்டிய பணியை பணித்து சென்றிருக்கிறார்.

லூக்கா 9:6-ம் 12 சீஷர்கள் இயேசு சொன்ன பணியை ஏற்று புறப்பட்டுப்போய் கிராமங்கள்தோறும் திரிந்து எங்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்து பிணியாளிகளை குணமாக்கி சுவிசேஷ வேலையை செய்ததுபோல நாம் ஒவ்வொருவரும் வீறுகொண்டு எழுந்து வட மாநிலங்களில் சுவிசேஷத்தை பிரசங்கிக்க எழும்புவோமாக!

### 2. வட மாநிலங்களில் இயேசுவின் சுவிசேஷத்தினால் உண்டாகும் ஆத்தும இரட்சிப்பு

2 தீமோ.2:9,10 “பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடுகிறபடி சுவிசேஷத்தின் நிமித்தம் கிறிஸ்து இயேசுவினால் உண்டாகும் இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி” வட மாநிலங்களில் நாம்போய் பிரசங்கித்தால் ஆத்தும இரட்சிப்பையும், நித்திய ஜீவனுக்குரிய ஆசீர்வாதங்களையும் வட மாநில ஜனங்கள்

பெற்று அனுபவிக்கிறதை நம் கண்கள் காண கர்த்தர் கிருபை செய்வார். எல்லாவற்றை பார்க்கிலும் விலையேறப்பெற்ற அரிதான ஆத்தும இரட்சிப்பை, நித்திய ஜீவனை நமது தேச ஜனங்களுக்கு தேவன் கிறிஸ்து இயேசுவின் மூலம் கட்டளையிடுவாராக.

### 3. வடமாநிலங்களில் சுவிசேஷ பணி அது நிறைவேற்றி முடித்திட வேண்டிய பணி

2 தீமோ.4:5-ல் தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் ஆலோசனை சொல்லும்போது "சுவிசேஷகனுடைய வேலையை செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" என்று குறிப்பிடுகிறார். இயேசுவின் அன்பை ருசித்த ஒவ்வொருவரும் தீமோத்தேயுவுக்கு பவுல் குறிப்பிடுகிறபடி நாம் ஒவ்வொருவரும வடமாநிலங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியை ஜெபத்தோடும், உத்தரவாதத்தோடும், தியாகத்தோடும், கிரயத்தோடும் வட மாநிலங்களில் சென்று இயேசுவை சுவிசேஷமாய் அறிவிக்கும் பணி செய்து முடித்திட தேவன்கிருபை செய்வாராக! மிஷனெரியால் உலகில் பணி செய்ய வந்த இயேசு வெற்றியாய் முடித்து சென்றார். பவுல் அப்போஸ்தலன் சுவிசேஷ பணி செய்ய ஆரம்பித்து பூரணமாய் அதை செய்து முடித்து தேவனை மகிமைப்படுத்தினான். அதுபோல நாம் அனைவரும் இக்கடைசி காலத்தில் வடமாநில சுவிசேஷ பணி செய்ய, செய்து முடிக்க நம்மை அர்பணிப்போமாக! செயல்படுவோமாக! கர்த்தர் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## வடமேற்கு மிஷன் ஊழிய அறிக்கை

### வடமேற்கு மிஷன் தலைவர்களின் கூடுகை

இவ்வாண்டிற்கான வடமேற்கு மிஷன் தலைவர்களின் கூடுகை கடந்த ஜனவரி மாதம் 28, 29 ஆகிய தேதிகளில் பில்லர் ரெட்ரிட் சென்டர், நாகமலை புதுக்கோட்டை, மதுரையில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையில் மிஷன் இயக்கத் தலைவர்கள், பிராந்திய இயக்குனர்கள் மற்றும் மண்டல தலைவர்களாக 30 பேர் கலந்துகொண்டனர்.

இக்கூடுகையில் மிஷன் பணிக்கென்று மண்டலத்தின் சார்பாக செய்ய வேண்டிய காரியங்கள் மற்றும் மிஷன் பணித்தள மேம்பாட்டிற்கான காரியங்களும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து...

- மிஷனரி ஜெபமும், திருச்சபை மிஷனரி பணியும்
- மிஷன் இறையியல்
- நடைமுறையில் மிஷனரிகள் சந்திக்கும் சவால்கள்
- பவுலும். அவரது மிஷனரிப் பயணங்களும்
- மிஷனரிப் பணியின் எதிர்காலம்

ஆகிய தலைப்புகளில் நடைபெற்ற கருத்தரங்குகள் மிகவும் ஆசீர்வாதமாகவும், மிஷன் பணியில் முன்னோக்கிச் செல்ல உந்துதலாகவும் இருந்தது.

Rev.சாமுவேல் ஜெபராஜ், தூத்துக்குடி, அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.






### பிஞ்ஜரா (இஸ்லாம்) மக்களினத்திற்காக ஜெபியுங்கள்



மக்கள் இனம் : பிஞ்ஜரா (இஸ்லாம்)

மொழி : உருது

மக்கள் தொகை : 32,58,000

கிறிஸ்தவர்கள் : 0,00%

அதிகம் வாழும் பகுதி : உத்திரபிரதேசம், மத்தியபிரதேசம், பீகார்

**நம்பிக்கை** : பிஞ்ஜரா இன மக்கள் இஸ்லாமிய கோட்பாடுகளோடு இந்து மதத்தின் மீதும் நம்பிக்கையுடையவர்களாய் காணப்படுகின்றனர். இந்து பண்டிகைகளையும் கொண்டாடுகின்றனர். தங்கள் வேண்டுதல்கள் நிறைவேற இந்து கோவில்களுக்குச் சென்று நேர்த்திகடனும் செலுத்துகின்றனர். இவர்கள் பிஞ்ஜரா என்றும் அழைக்கப்படுகின்றனர். பிஞ்ஜரா என்றால் நெசவு செய்பவர் என்று அர்த்தம்.

தத்தெடுத்துள்ள மண்டலம் : தேனி

### மிஷனரிகளின் பணித்தள சாட்சிகள்

**1. பாஸ்டர். பால் ஜேம்ஸ், ஹரியானா** : கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். எங்கள் விசுவாசியான சகோதரி.ரெபெக்காள் அவர்கள் சில நாட்களாக மிகுதியான இரத்தப்போக்கினால் கஷ்டப்பட்டு வந்தார்கள். மருத்துவம் செய்தும் சுகமடையவில்லை. கடந்த மாத சபை ஆராதனையில் வியாதியஸ்தர்களுக்காக சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. சகோதரி ரெபெக்காளும் விசுவாசத்துடன் ஜெபித்தார். அவ்வேளையில் கர்த்தர் அவர்களுக்கு அற்புதம் தந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**இந்த மிஷனரியை தாங்கும் சபை** : Rev.A.எட்வின் பிரபாகர், நாசரேத், Rev. A.ரமேஷ், ராதாபுரம்

**2.பாஸ்டர். G.பிரமோடு குமார், பரிதாபாத்** : கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். எங்கள் சபைக்கு அருகில் ஊர்மிளா என்ற சகோதரி வசித்து வந்தார்.

கடந்த சில வருடங்களாக கர்ப்பப்பை பலவீனத்தில் கஷ்டப்பட்டு வந்தார்கள். பல மருத்துவமனைக்கு சென்றும் பிரயோஜனம் இல்லை. மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் கடந்த நாட்கள் சபைக்கு வந்தார்கள். ஆராதனையில் அவருக்காக ஜெபித்தோம். கர்த்தர் அற்புத சுகம் தந்தார். தொடர்ந்து சபைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக, ஆமென்.

**இந்த மிஷனரியை தாங்கும் சபை** : Rev. சாமுவேல் ஜெயராஜ், ராதாபுரம்.

---

## தேவனுடைய வார்த்தை - சங்கீதம் 119

119-ம் சங்கீதத்தில் தேவனுடைய வார்த்தை (கர்த்தருடைய வார்த்தை) என்ற சொல் பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் சிலவற்றை காண்போம்

**1. தேவனின் பிள்ளை செய்ய வேண்டியவை என்ன?**

- நாம் தேவனின் கற்பனையில் நடக்க வேண்டும் (119:1).
- நாம் அவருடைய கட்டளைகளைக் கடைபிடிக்க வேண்டும் (119:4, 9).
- நாம் அவைகளை இருதயத்தில் மறைத்து வைக்க வேண்டும் (119:11).
- நாம் அவைகளை தியானிக்க வேண்டும் (119:15).
- நாம் அவைகளை மறக்கக் கூடாது (119:6).

**2. தேவன் நமக்கு என்ன செய்வார்?**

- அவருடைய வார்த்தையினால் நம்மை பலப்படுத்துகிறார் (119:28).
- அவருடைய வார்த்தையினால் நம்மை இரட்சிக்கிறார் (119:41).
- அவருடைய வார்த்தையினால் நம்மை தேற்றுகிறார் (119:50, 76)
- அவருடைய வார்த்தையினால் நம்மை உயிர்ப்பிக்கிறார் (119:25).
- அவருடைய வார்த்தையினால் நம்மை வழிநடத்துகிறார் (119:105).

**3. அவருடைய வார்த்தை எப்படிப்பட்டது?**

- அது உண்மையாயிருக்கிறது (119:86).
- அது நிலையாயிருக்கிறது (119:89).
- அது இனிமையாயிருக்கிறது (119:103).
- அது தீபமாயிருக்கிறது (119:105).
- அது ஒளியாயிருக்கிறது (119:105).

**4. ஏன் தேவனுடைய வார்த்தை இன்பம் தரக்கூடியதாயிருக்கிறது?**

- தேவனுடைய வார்த்தை சரியானது (119:128).
- தேவனுடைய வார்த்தை விலையேறப் பெற்றது (119:127).
- தேவனுடைய வார்த்தை அதிசயமானது (119:129).
- தேவனுடைய வார்த்தை புடமிடப்பட்டது மற்றும் சமூலமும் சத்தியமானது (119:140, 160).
- தேவனுடைய வார்த்தை மகிழ்ச்சியானது (119:174).



# பலங்கொண்டு திடமனதாயிரு


**Rev. J. சாமுவேல் ஜெபராஜ்**

செயலாளர், தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியம்


கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புருஷர்கள் யாவருக்கும் தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியத்தின் சார்பாக வாழ்த்துக்கள். இந்த பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

தேவன் உங்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை, தரிசனங்களை நீங்கள் சுதந்தரிக்க வேண்டுமானால் **பலங்கொண்டு திடமனதாயிருக்க** வேண்டியது மிக அவசியம். மோசே மரித்த பின்பு யோசுவா மிகவும் கலங்கினான். காரணம் சாதிக்க வேண்டிய காரியங்கள் இன்னும் ஏராளம் உள்ளது. இதை வாசிக்கிற அன்புக்குரியவர்களே. உங்கள் வாழ்விலும் எதிர்காலத்தை குறித்த கவலையோடு காணப்படுகிறீர்களோ! தேவன் உண்மையுள்ளவர். நிச்சயம் உங்கள் வாழ்விலும், உங்களை கொண்டும் தேவன் செய்ய நினைத்தவைகள் நிச்சயம் நிறைவேறும்.

**1. அவிசுவாசத்தை அகற்றுங்கள்** (மத்.14:31)

நீங்கள் பலங்கொண்டு திடமனதாய் இருக்க வேண்டுமானால் அவிசுவாசத்திற்கு இடம் இருக்கக் கூடாது. இயேசு சமுத்திரத்தின் மேல் நடந்து வருகிறதை 12 சீஷர்களுமே பார்த்தார்கள். ஆனால் பேதுரு மட்டும் தான் நானும் கடலில் வரட்டுமா என கேட்டான். இயேசு வர வேண்டாம் என சொல்லவில்லை. வா என்றார். ஆனால் சமுத்திரத்தின் மேல் சற்று தூரம் நடந்த பேதுரு பயந்து விட்டான். சமுத்திரத்தில் மூழ்க ஆரம்பித்தான். இயேசு அவனை கைவிடவில்லை. ஆனால் கடிந்து கொண்டார். இதை வாசிக்கிற எனக்கு அருமையானவர்களே! மற்றவர்கள் செய்ய முடியாததை நீங்கள் செய்ய வேண்டுமானால் ஆசை இருந்தால் மட்டும் போதாது. சிலருக்கு தேவனுக்காக பெரிய காரியங்களை செய்ய வேண்டும் என்ற ஆசை உண்டு. ஆனால் அதற்காக விசுவாசம் மட்டும் இருந்தால் போதாது, விசுவாசகிரியை இல்லாத காரணத்தால் தோற்றுபோய் விடுகிறார்கள். இதை வாசிக்கிறவர்களே விசுவாசத்தில் பலப்படுங்கள். வருகிற நாட்களில் தேவன் உங்களை கொண்டு பெரிய காரியங்களை செய்வார்.

**2. ஆவியில் நிரம்புங்கள்** (லூக்கா 1:80)

நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருக்க வேண்டுமானால் பரிசுத்த ஆவியில் நிரம்புங்கள். யோவான்ஸ்நானன் தேவன் தன்னை எதற்காக அனுப்பினாரோ அதை கொஞ்சம் கூட பயம் இல்லாமல் செய்தார். எவருக்கும் எதற்கும் பயப்படவே இல்லை. இந்த தைரியம் எப்படி அவனுக்கு வந்தது. அவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தான். இதை வாசிக்கிறவர்களே உங்களை குறித்த தெய்வ திட்டத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமானால் உங்கள் சொந்த பெலத்தால் முடியாது. நிச்சயமாக ஆவியானவரின் பெலன் தேவை. சிம்சோன் பரிசுத்த ஆவியின் பெலத்தினால் சாதித்தவைகள் அநேகம். ஆனால் அந்த ஆவியின் பெலத்தை இழந்தபோதோ ஒன்றும் இல்லாத பெலவீனனாக மாறிவிட்டான். ஒவ்வொரு நாளும் புது எண்ணெயினால் அபிஷேகம் பண்ணப்படுங்கள். பெற்ற அபிஷேகத்தை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருந்தால் அப்போஸ்தலனாகிய பவுலைப் போல அநேகரை திடப்படுத்துவீர்கள் (அப். 27:22,25). இன்றைய நாட்களில் அநேகர் திடனற்றுபோய் காணப்படுகிறார்கள். நீங்கள் உங்களை திடப்படுத்திக் கொள்ளுங்கள். வருகிற காலத்தில் தேவன் உங்களை கொண்டு அநேகரை பெலப்படுத்தி திடப்படுத்துவார் ஆமென்.

# Antioch Biblical Seminary & College

ASSEMBLIES OF GOD

Affiliated with Tamil District Council of SIAG

Accredited by Asia Theological Association (ATA)

## M.Th. Program : *A Non - Residential Course in* Christian Theology

## ***Wanted : Residential Faculty with M.Th./Ph.D. (ATA / Serampore) in any discipline. (North Indians Preferred)***

| Courses | Duration | Qualification |
|---|---|---|
| B.Th. | 3 Years | 12th Pass |
| M.Div. | 2/3 Years | B.Th. (ATA)/any University Degree |
| Dip.Th. | 2 Years | 10th Pass |





## College Reopens on the 1st of June 2020

The Registrar

**ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE**

Post.Box-05, Pondicherry University, Pillaichavady,Mathur Road, Puducherry- 605 014.

Office Phone: (0413) 2970521/22/23 Cell: 09865209821 Email: abscollege@gmail.com.

Website: www.antioch.in

## இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் ஆசீர்வாதங்கள்



1. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு மீட்பும் பாவ மன்னிப்பும் கிடைக்கிறது (1 பேதுரு 1:18, 19; கொலோ. 1:14;எபே. 1:7; எபி. 9:12).
2. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு சமீபமாகிறோம் (எபே. 2:11-13).
3. இயேசுவின் இரத்தம் நம்மை பாவங்களறக் கழுவி சுத்திகரிக்கிறது (வெளி.1:5; 1 யோவான் 1:7).
4. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கப்படுகிறோம்(வெளி. 1:5).
5. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு சமாதானம் உண்டாகிறது (கொலோ. 1: 20).
6. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் சாத்தானை ஜெயிக்கிறோம் (வெளி. 12 : 11).
7. இயேசுவின் இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு நம்முடைய மனச்சாட்சியை செத்த கிரியைகளறச் சுத்திகரிக்கிறது (எபி. 9 : 14).
8. இயேசுவின் இரத்தம் தேவனுடைய பரிசுத்த சந்நிதிக்குள் பிரவேசிப்பதற்கு நமக்கு தைரியத்தை கொடுக்கிறது (எபி. 10:19, 20).
9. இயேசுவின் நித்திய உடன்படிக்கையின் இரத்தம் நம்மை சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குகிறது (எபி.13:20, 21).
10. இயேசுவின் இரத்தம் நம்மை நீதிமான்களாக மாற்றி, தேவனுடைய கோபாக்கினைக்கு நீக்கி நம்மை இரட்சிக்கிறது (ரோமர் 5:9).

## சிலுவையில் மலர்ந்த 7 பூக்கள்

### இயேசு சிலுவையில் பேசின ஏழு வார்த்தைகள்

| | |
|---|---|
| 1. மன்னிப்பு | - லூக்கா 23 : 34 |
| 2. இரட்சிப்பு | - லூக்கா 23 : 43 |
| 3. அரவணைப்பு (அன்பு) | - யோவான் 19 : 26, 27 |
| 4. தத்தளிப்பு | - மத்தேயு 27 : 46 |
| 5. தவிப்பு | - யோவான் 19 : 28 |
| 6. பூரிப்பு | - யோவான் 19 : 30 |
| 7. ஒப்புவிப்பு | - லூக்கா 23 : 46 |



# மன்னித்து விட்டீர்களா?


## Rev. R. நெல்சன் ஞானகுமார்

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.


"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத். 6:14,15).

## I. ஏன் மன்னிக்கவேண்டும்?

**1. ஆண்டவனின் மன்னிப்பு** (சங்கீதம். 103:10)

ஆண்டவர் நமது பாவங்களுக்குத்தக்கதாக நம்மை தண்டியாமல் நம்மை மன்னித்திருக்கிறார். நாமும் மன்னிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார். நாம் மன்னிக்காவிட்டால் ஆண்டவரும் நம்மை மன்னிக்க மாட்டார். ஆண்டவர் மன்னிக்காவிட்டால் பரலோகம் போக முடியாது.

**2. இயேசு கிறிஸ்துவின் மாதிரி** (லூக்கா 23:34)

மன்னிக்க முடியாதவர்களையும் மன்னிப்பவர் இயேசு. கையும் களவுமாக விபச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெண்ணை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று சட்டமே சொல்லுகிறது. ஆனால் இயேசுவோ மன்னித்துவிட்டு இனி பாவஞ்செய்யாதே என்று அனுப்பினார்.

**3. சாத்தான் நுழையாமலிருக்க** (2கொரி. 2:10,11)

மன்னியாதவர்கள் இருதயமே சாத்தான் எளிதில் நுழையக் கூடிய வாசஸ்தலமாகும். எனவே சாத்தானின் கிரியைகளுக்கு இடம் கொடாதிருக்க வேண்டுமானால் மன்னித்துவிடுங்கள்.

**4. சுகமடைய** (யாக்கோபு 5:16)

உள்ளே இருக்கும் கசப்பு பல சரீர வியாதிகளுக்கு காரணமாயிருக்கிறது. எனவே உள்ளான காயங்கள் ஆற்றப்படும்போது சரீர வியாதிகளும் குணமாகும்.

மற்றவர்களை மற்றவர்களுக்காக மன்னிக்காவிட்டாலும், நமக்காகவாவது நாம் மன்னிக்க வேண்டும்.

## II. மன்னியாமைக்கான அடையாளங்கள் (Symptoms of Unforgiveness)

கீழ்க்கண்ட அடையாளங்கள் உங்களிடமிருக்குமானால் யாரோ ஒருவரை இன்னும் மன்னிக்காமல் இருக்கிறீர்கள் என்பதே உண்மை.

**1. என்ன செய்தாலும் தவறாகவே தெரியும்**

யாரை மன்னிக்காமலிருக்கிறீர்களோ அவர்கள் என்ன செய்தாலும் உங்களுக்கு தவறாகவே தெரியும். உதாரணமாக அவர்கள் உங்களைப் பார்த்து சிரிக்கும்போது பரிகாசம் பண்ணுவதாக எடுத்துக்கொள்வீர்கள். உங்களைப் பார்த்து சிரிக்காமல் போனால் அதை திமிர் என்று சொல்வீர்கள்.

**2. ஆசீர்வாதமாயிருப்பதை பார்த்து எரிச்சலடைவார்கள்**

யாரை மன்னிக்காமலிருக்கிறீர்களோ அவர்கள் நன்றாக

ஆசீர்வாதமாயிருப்பதாக கேள்விப்பட்டால் சந்தோஷப்பட மாட்டீர்கள். மாறாக எரிச்சல் அடைவீர்கள் (நெகே. 4:11).

**3. கஷ்டப்படும்போது மகிழ்வார்கள்**

யாரை மன்னிக்காமலிருக்கிறீர்களோ அவர்கள் ஒரு நெருக்கத்தில் இருக்கிறார்கள் என்று கேள்விப்படும்போது களிகூறுவீர்கள். மேன்மை பாராட்டுவீர்கள். சத்துரு விழும்போது சந்தோஷப்பட்டால் கர்த்தர் அதை காண்பார். அவர்கள் மீதான ஆண்டவருடைய கோபம் உங்கள் மீது திரும்ப வாய்ப்பிருக்கிறது (நீதி. 24:17,18).

பிரதான எதிரியான சவுல் செத்துவிட்டான் என்று கேள்விப்பட்ட தாவீது களிகூறாமல் அழுது புலம்பினான் என்று வேதம் கூறுகிறது (2 சாமு.1:12).

**4. புறங்கூறுவார்கள்**

யாரை மன்னிக்காமலிருக்கிறீர்களோ அவர்களைக் குறித்து அவர்களைத் தெரிந்தவர்களை சந்திக்கும்போது குறை கூறுவீர்கள். புறங்கூறுதல் என்பது ஒருவருடைய பெயரைக் கெடுக்கும்படியாக அவர்களைக் குறித்து தவறான தகவல்களை மற்றவர்களிடம் கூறுவது. புறங்கூறுகிறவன் மதிகேடன் (நீதி. 10:18).

**5. பழிவாங்கத் துடிப்பார்கள்**

யாரை மன்னியாமலிருக்கிறீர்களோ அவர்களை பழிவாங்கும் நாளுக்காக பதிற் செய்யும் நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள். ஒத்துழைக்காமலிருப்பது, பேசாமலிருப்பது, உதவி செய்யாமலிருப்பது, சந்திக்க மறுப்பது... போன்ற செயல்களில் ஈடுபடுவீர்கள்.

பழிவாங்குதல் ஆண்டவருக்குரியது (ரோமர் 12:19). நீங்களே போராடிக்கொண்டிராதிருங்கள். நியாயமாய் தீர்ப்பு செய்கிற ஆண்டவரிடம் ஒப்புக்கொடுங்கள். ஆண்டவர் உங்களுக்காக யுத்தம் செய்வார் (2 பேதுரு 2:23).

**6. உள்ளொன்றும் புறம்பொன்றுமாயிருப்பார்கள்** (சங். 28:3).

மன்னியாதவர்களை எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தால் சிலர் கண்டுகொள்ளாதது போல போய்விடுவார்கள். சிலரோ கைகொடுத்து சிரித்து பேசுவார்கள். உள்ளத்திலோ எரிச்சலோடு, வேதனையோடு இருப்பார்கள். யூதாஸ் ஆண்டவரை கட்டியணைத்து முத்தம் கொடுத்து மிகவும் நெருக்கமாக இருப்பதுபோல காட்டிக்கொண்டான். ஆனால் உள்ளத்திலோ துரோகத்தை வைத்திருந்தான்.

**7. மறக்கமாட்டார்கள்**

யாரோ செய்த காரியம் அடிக்கடி நினைவில் கொண்டு வந்து வேதனைப்பட்டுக்கொண்டு இருப்பார்கள். மிகுந்த களைப்போடு படுக்கைக்குப் போனாலும் யாரோ சொன்ன வார்த்தை, செய்த துரோகம் ஞாபகம் வந்துவிட்டால் அதை நினைத்து நினைத்து தூங்க மாட்டார்கள். மிகுந்த பசியோடு சாப்பிடப்போனாலும் சாப்பிட ஆரம்பிக்கும்போது யாரோ சொன்ன வார்த்தை, செய்த துரோகம் ஞாபகம் வந்துவிட்டால் அன்று சாப்பாடு இன்பமானதாக இருக்காது.

மனப்பூர்வமாக மன்னித்துவிட மனதில்லாதவர்கள் சொல்லும் வார்த்தைகள் என்னவென்றால், மன்னித்துவிட்டேன். ஆனால் மறக்கத்தான் முடியவில்லை என்பார்கள். அன்பானவர்களே மன்னிக்கும் தன்மையுடைய இரண்டுபேர் இணைவதுதான் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை. கணவன் மனைவிக்கிடையே என்ன பிரச்சனை என்றாலும் அன்றே உட்கார்ந்து பேசுங்கள். குறைகள் உணர்த்தப்படும்போது நியாயப்படுத்தாதீர்கள். ஒருவருக்கொருவர் மன்னிப்பு கேளுங்கள். ஒப்புரவாகுங்கள். ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.



# உங்களுக்கு சந்தோஷம் தருவது எது?

**Rev. V.J. பாலஸ்**
மூத்த போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவன் கிருபையையும் சமாதானத்தையும் உங்கள் வாழ்க்கையில் பெருகச் செய்வாராக.

சங்கீதம் 149:2 இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும் சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவுங்கடவர்கள்.

இஸ்ரவேல் தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்ட ஜனம் தேவனுடைய ராஜ்யத்திற்கென்று வேறுபடுத்தப்பட்ட ஜனம். இஸ்ரவேல் உண்டாக்கப் பட்டவைகளில் அல்ல. தன்னை உண்டாக்கினவரில் மகிழவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். உலகத்தில் உள்ள பிரச்சனைகளுக்கு காரணம் மனிதர்கள். தங்களை உண்டாக்கின தேவன் யாரென்று அறியாமல் இருப்பதுதான். மனிதன் தன்னை உண்டாக்கின தேவனை அறிந்துகொண்டு அவருக்கு ஆராதனை செய்ய வேண்டும். அப்படி ஆராதனை செய்வதில்தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்களை உண்டாக்கினவரை நோக்கிப் பார்க்காமல் அவர்களாக விக்கிரகங்களை உண்டாக்கி வைத்து அதனைப் பணிந்து கொண்டார்கள். அதனால்தான் அவர்கள் வாழ்க்கையில் பல பிரச்சனைகள் உண்டானது. நம்முடைய வாழ்க்கையில் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியது என்னவென்றால் நமக்கு மகிழ்ச்சி தருவது தேவனை ஆராதிப்பதா? அல்லது இந்த உலகத்திற்குரிய காரியங்களா?

### கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதே நமக்கு பெலன்

பாவம் நிறைந்த இந்த உலகத்திலே தேவனுடைய பிள்ளைகள் எப்போதும் கர்த்தருக்குள் மகிழ்ந்திருக்க வேண்டும். நெகே.8:10-ல் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன் என்று சொல்லப்பட்டுள்ளது. கவலைப்படும்போது, பயப்படும்போது நம்முடைய ஆவிக்குரிய சந்தோஷத்தை, தேவனுடைய உறவை நாம் இழந்து போகிறோம். பாவம் நமக்குள்ளே இருக்குமானால் அந்தப் பாவம் தேவனால் வருகிற சந்தோஷத்தை தடுக்கிறது. ஒவ்வொரு விசுவாசியும் பிழைக்க வேண்டுமானால் கர்த்தருக்குள் இருக்க வேண்டும். சபைக்குள் இருக்கும்போது மாத்திரமல்ல நாம் எங்கு சென்றாலும் கர்த்தருக்குள் இருக்க வேண்டும். அப்படியானால் நாம் பிழைத்திருப்போம், மகிழ்ந்திருப்போம். இந்த சந்தோஷம் நமக்குள் குறையும்போது நம்மை நாமே ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

### பாவத்தினால் வருகிற சந்தோஷம்

தேவ சமுகத்தைவிட்டு இஸ்ரவேல் ஜனங்கள் விலகிப்போனபோது இஸ்ரவேலர் தன்னை உண்டாக்கின தேவனை மறந்து விக்கிரகங்களுக்கு ஆராதனை செய்தார்கள் (அப்.7:41). அந்நாட்களில் ஒரு கன்று குட்டியை உண்டுபண்ணி விக்கிரகத்திற்கு பலியிட்டு தங்கள் கையின் கிரியையில் களிகூர்ந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. இதனால் இஸ்ரவேல் ஜனங்களுடைய வாழ்க்கையில் பல்வேறு இழப்புகள் ஏற்பட்டது. அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய

ஆசீர்வாதங்களை அடைய முடியாமல் போனது. இரட்சிக்கப்படாதவர்களுக்கு இருக்கும் சந்தோஷம் நிலையானதல்ல, பாவம் நமக்கு வரக்கூடிய சந்தோஷத்தைக் கெடுக்கிறது. அதனால் எப்போதும் தேவனோடு சரியான ஐக்கியம் உறவு நமக்கு இருக்க வேண்டும்.

### இரட்சிப்பினால் வரும் சந்தோஷம்

அன்னாளுடைய இருதயம் பாதிக்கப்பட்டிருந்தது. அவளுடைய சக்களத்தி அவளை நிந்தித்தாள், தூஷித்தாள். ஆனால் அவள் தன்னுடைய இருதயத்தையெல்லாம் தேவசமுகத்திலே ஊற்றி ஜெபம்பண்ணினபோது ஆண்டவர் அவளுடைய ஜெபத்தை கேட்டார். அதினாலே அன்னாள் (1சாமு.2:1) உம்முடைய ரட்சிப்பினாலே சந்தோஷப்படுகிறேன் என்று ஆண்டவரைத் துதித்து மகிமைப்படுத்தினாள். ஏசாயா 25:9-ல் அக்காலத்திலே இதோ இவரே நம்முடைய தேவன்.... இவருடைய இரட்சிப்பினால் மகிழ்ந்து களிகூறுவோம். இயேசு கிறிஸ்து குறித்த காலத்திலே உலகத்திலே வந்து தம்முடைய ஜீவனைக் கொடுத்து இரட்சிப்பை நமக்கு கொடுத்தார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் அந்த இரட்சிப்பை பெறமுடியவில்லை. ஆனால் ஒருகாலம் வரும் அக்காலத்திலே இஸ்ரவேல் ஜனங்களும் இந்த இரட்சிப்பை பெற்றுக்கொள்வார்கள். அப்பொழுது அவர்கள் களிகூர்ந்து மகிழுவார்கள்.

### கீழ்படிதலினால் வரும் சந்தோஷம்

அப்போஸ்தலர் நடபடிகளிலே நாம் வாசிக்கும்போது கந்தாகேமந்திரி எத்தியோப்பியாவிலிருந்து எருசலேமுக்கு கர்த்தரைப் பணிந்து கொள்ள வந்தான். அவன் திரும்பி தன் ஊருக்கு பிரயாணமாய் போகையில் ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை வாசித்து கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு சந்தேகம் எழும்பினது. ஆவியானவர் பிலிப்பை அங்கு அனுப்பினார். பிலிப்பு அவனுக்கு இருந்த சந்தேகத்தை தீர்த்து வேத சத்தியங்களை எடுத்து கூறினான். கந்தாகேமந்திரி இந்த சத்தியத்தை கேட்டபொழுது அதற்கு கீழ்படிந்து தன்னை ஒப்புக்கொடுத்தான். பின்பு தண்ணீருள்ள ஒரு இடத்தை கண்டபோது ஞானஸ்நானமும் பெற்றுக்கொண்டான். பின்பு ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய் விட்டார். கந்தாகேமந்திரி கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதால் அவனுக்குள் ஒரு சந்தோஷம் உண்டானது. அப். 8:39-ஐ வாசிக்கும்போது அவன் சந்தோஷத்தோடு தன் வழியே போனான் என்று எழுதப்பட்டுள்ளது. ஆகவே இரட்சிக்கப்பட்ட நாம் வசனத்திற்கு கீழ்படியும்போது நமக்குள் பெரிய சந்தோஷம் உண்டாகிறது. ஆகவே நாம் வசனத்தை கேட்டு வாசித்து கீழ்படிய நம்மை ஒப்புக்கொடுக்கும்போது நம்முடைய வாழ்க்கையிலும் நாம் நிறைவான சந்தோஷத்தை அனுபவிக்க முடியும். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அப்படிப்பட்ட சந்தோஷத்தைக் கொடுத்து ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்

பெண்களுக்கான....

# திரித்துவ வேதாகமக் கல்லூரி

(A Theological Institution of the Tamil District Council of SIAG)
Accredited by Asia Theological Association (ATA)
Kanakkapillaivalasai, Sengottai, Tamilnadu – 627 809

| Course | Duration | Eligibility |
|---|---|---|
| Diploma in Theology (Dip.Th.) - Tamil | 2 Years | S.S.L.C Pass |
| Bachelor of Theology (B.Th.) - English | 3 Years | HSC (+2) Pass |
| Master of Divinity (M.Div.) English | 3 Years | Any Bachelor Degree |

இரட்சிப்பு, ஞானஸ்நானம்,
பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற,
ஊழிய அழைப்புடைய 18 வயது நிரம்பிய
பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
திரித்துவ வேதாகமக் கல்லூரி, மாணவிகள் தங்கி படிப்பதற்கான
சிறந்த, நவீன வசதிகளைக் கொண்டுள்ளது.
அர்ப்பணிப்புள்ள சிறந்த கல்வித் தகுதியுடைய ஆவிக்குரிய,
அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்படுகிறது.

விண்ணப்பப் படிவங்கள் ஆயத்தமாய் உள்ளன!
பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள்
வந்துசேர வேண்டிய

**கடைசி நாள் : மே 15, 2020**

விண்ணப்பப் படிவங்கள்
நேரில் பெற ரூ.130/- ; தபாலில் பெற ரூ.150/-

தொடர்பு :
The Registrar
**Trinity Bible College**
Kanakkapillaivasai, Post Box No. 25, Sengottai - 627 809
Phone : 04633 - 234243 & 99942 47117



# பரிந்து பேசும் "இயேசு"

**Rev. I. அலெக்ஸாண்டர்**
விஷன் 2020 ஜெப ஒருங்கிணைப்பாளர்

அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கொண்டு, திருப்தியாவார் (ஏசாயா 53:11).

He shall see of the travail of His soul and shall be satisfied. Isiah 53:11).

ஏசாயா 53-ம் அதிகாரம் தேவ குமாரனும் மேசியாவுமாகிய நசரேயனாகிய இயேசு கிறிஸ்து ஊழியனாக (Servant) விவரிக்கப்படுகிறார்.

1-3 வசனங்கள்- துக்கம் நிறைந்த ஊழியன் (Sorrowing Servant)

4-6 வசனங்கள் - அடிக்கப்பட்ட ஊழியன் (Smitten Servant)

7-9 வசனங்கள் - அமைதியான ஊழியன் (Silent Servant)

10-12 வசனங்கள் - திருப்தியான ஊழியனாகவும் (Satisfied Servant) விவரிக்கப்பட்டுள்ளார்.

கல்வாரி சிலுவையில் இயேசுவின் ஊழியம் திருப்தியைக் கொடுத்தது. இயேசு எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமானவைகளை செய்து வந்தார் என்று பார்க்கிறோம். ஏசாயா 53:10-12 வசனங்களில் நாம் எப்படி ஜெபத்தில் பரிந்து பேசவேண்டும் அல்லது போராட வேண்டும் என்பதற்கான மாதிரியை பார்க்கிறோம். ஒரு தாய் தன்னுடைய வேதனையின் பலனாக ஒரு குழந்தையை பெற்றுகொண்டு. களிகூர்வதுபோல நாம் ஜெபத்தில் ஆத்துமாக்களுக்காக போராடி ஜெபிக்க வேண்டும். ஏசாயா 53:12-ல் அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு. அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து **அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம்** அநேகரை அவருக்குப் பங்காக கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார் என்று வாசிக்கிறோம். நாமும் ஜெபத்தில் போராடுகிறவர்களாய் வேண்டிக்கொள்ளுகிறவர்களாயிருந்தால் அதின் பலனைக் காண உதவி செய்வார்.

நாம் ஜெபிக்கிறோம், ஆனால் அதின் கனியைக் காண்கிறோமா? ஜெபித்து அதின் பலனைக் காண்கிறோமா? நம்முடைய தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர். ஜெபத்திற்குப் பதிலளிக்கிறவர். சங்.65:2-ல் **ஜெபத்தைக் கேட்கிறவரே மாம்சமான யாவரும் உம்மிடத்தில வருவார்கள்** என்று வாசிக்கிறோம். தேவனிடத்தில் மூன்று பதில்கள் உண்டு. **ஆம், இல்லை, காத்திரு** என்பதுதான். இன்று தேசத்திற்காக திறப்பில் நிற்கவும். சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைக் தேவன் தேடிக்கொண்டிருக்கிறார் (எசே. 22:30).

இயேசு எப்படி ஜெபித்தார்? அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், நம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி பலத்த சத்தத்தோடும், **கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,** அவர் குமாரனாயிருந்தும், பட்டபாடுகளினாலே கீழ்படிதலைக் கற்றுக்கொண்டு தாம் பூரணரான பின்பு தமக்கு கீழ்படிகிறயாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார் (எபி. 5:7).

"Travail" என்ற வார்த்தைக்கு - வேதனை என்று மொழி பெயர்க்கப்பட்டிருந்தாலும், இது பிரசவ வேதனையைக் குறிக்கும். இன்று ஆத்துமாக்களுக்காக அப்படிப்பட்ட வேதனையோடு கிறிஸ்துவைப்போல பலத்த சத்தத்தோடு, கண்ணீரோடு விண்ணப்பம் பண்ணவும், வேண்டுதல் செய்யவும் தேவன் ஜெப வீரர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார். ஆதிசபையில் அப்படி போராடி ஜெபிக்கிறவர்கள் இருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்து வந்தார். இன்றைய மிகப்பெரிய தேவை, எலியாவைப்போல் கருத்தாய் ஜெபிக்கிறவர்கள். தானியேலைப் போல மூன்று வேளையும் ஜெபிக்கிறவர்கள். அன்னாளைப் போல தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும், பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்பவர்கள். அப்படி ஜெபிக்கும்போது தேசத்தில் எழுப்புதல் உண்டாகும்.

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு ஜெபவீரன். 1 தெச.1:3,4 வசனங்களில் நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து, எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக் குறித்து விண்ணப்பம் பண்ணி, உங்களெல்லாருக் காகவும், எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம் என்ற பவுல், கொலோசெயர் சபைக்கு எழுதும்போது, எப்பாப்பிராவை குறிப்பிட்டு, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறவன் என்று குறிப்பிடுகிறார். எப்பாப்பிராவைப்போல் ஜெபிக்கும் நபர்களை நம் நடுவில் தேவன் எழுப்புவாராக. மேலும் ரோமர் 15:32-ல் நீங்கள் தேவனை நோக்கி செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும் உங்களை வேண்டிக்கொள்கிறேன் என்றார் (ரோமர் 15:33).

நம்முடைய ஜெபத்தின் பலனைக்கண்டு திருப்தியாகும்வரை அன்னாளைப்போல, எலியாவைப்போல, பவுலைப்போல, யாக்கோபைப்போல, இயேசுவைப்போல போராடி ஜெபிக்க தேவன் உதவி செய்வாராக.

## ALPHABETICAL SIGNS OF CHRIST'S COMING

- A - Apostasy in the Church - 2 Timothy 3:5
- B - Blood and fire and pillars of smoke - Joel 2:30
- C - Counterfeit Christs - Mark 13:22
- D - Distress of nations - Luke 21:25
- E - Earthquakes multiplying - Matthew 24:7
- F - Famines - Matthew 24:7
- G - Greatest tribulation - Mark 13:l9
- H - Hearts of Men failing for fear - Luke 21:26
- I - Increase of travel and speed - Daniel 12:4
- J - Judgment of pestilence - Matthew 24:7
- K - Knowledge increases - 2 Timothy 3:7
- L - Lawlessness spreads - 2 Timothy 3:3
- M - Mockers, scoffers arise - 2 Peter 3:4
- N - Noah's day revived - Matthew 24:37
- O - Outpouring of the Holy Ghost - Joel 2:23
- P - Portrayal of God's power - Haggai 2: 6, 7
- Q - Quest for pleasure - 2 Timothy 3:4
- R - Riches accumulate - James 5: 1, 2, 3
- S - Spiritism doctrine grows - I Timothy 4:1
- T - Turning away from the truth - 2 Timothy 4: 3, 4
- U - Unprecedented wars and rumors of wars - Luke 21:9, 10
- V - Vast northern power to arise - Ezekiel 38
- W - Worldwide evangelism - Mark 13:10
- X - Exceptional astromical signs - Luke 21:25
- Y - Young people will be disobedient to parents - 2 Timothy 3:2
- Z - Zionism-restoration of the Jews to Palestine - Luke 21:29-31

***K. A. Murch***



# மிஷனல் சர்ச் குறித்த ஒரு புதிய பார்வை

**Rev. J. தேவதாசன் கலையரசன்**

மூத்த போதகர், பெத்தேல் ஏஜி. சர்ச், குளத்தூர்

ஐரோப்பிய மற்றும் வடஅமெரிக்காவில் உள்ள சபைகள் மற்றும் கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கு மங்கி வருவதைக் கண்டு மனம் வருந்திய இறையியல் வல்லுநர்களில், 6 மிஷன் நிபுணர்கள் (Missiologist) எழுதிய ஒரு புத்தகத்தின் மூலம் (Missional Church) என்ற பதமும், கொள்கையும் பிரபல்யமடைந்து வருகிறது. (The GOCN'S 1998 Publication, Missional Church, A vision for the sending of the Church in North America) கடந்த 20 வருடங்களாக இக்கருத்து குறித்து தீவிரமாக. வலுவடைந்து, பரவி வருகிறது. இந்தியாவைப் பொறுத்தமட்டில் தேவ மனிதன் Rickwarren அவர்களின் purpose driven life என்ற புத்தகத்தின் மூலமும், கருத்தரங்குகளின் மூலமும் மிஷனல் சர்ச் என்ற கொள்கை இந்தியாவிலும் இப்போது தீவிரமாக பரவி வருகிறது.

இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு ஸ்தலசபையும், இது குறித்து அறிந்துகொள்ள வேண்டிய சில முக்கியமான விஷயங்களை இக்கட்டுரை விவாதிக்கிறது.

## I. மிஷனல் சர்ச் என்ற பதத்தின் பொருள்

Google Dictionary-யில் போய் Missional Church Meaning in Tamil என்று பதிவிட்டுப்பாருங்கள், மிஷனல் சர்ச் என்றே பதில் வரும். குழப்பம் அங்கு மட்டும் இல்லை. இதன் வியாக்கியானமும், அர்த்தப்படுத்தலும் இந்த கருத்தை உருவாக்கியவர்களிடத்திலும் இருந்திருக்கிறது. ஒருமித்த கருத்து துவக்க காலத்திலிருந்தே எழும்பவில்லை. ஒவ்வொரு ஸ்தாபனத்தின் பார்வையிலும் ஒவ்வொரு அர்த்தப்படுத்துதல் இருக்கிறதால் கடந்த 20 வருடங்களில் ஒரு முடிவான விளக்கம் சொல்லப்பட முடிகிறதில்லை. ஒவ்வொரு விசுவாசியும் மிஷனரி என்ற கொள்கை ஆரம்பித்ததும் இந்த மிஷனல் சர்ச் கொள்கையின் அடிப்படையில் தான். இதே மிஷனல் சர்ச் கொள்கையில் தீவிர பிடிப்புள்ளவர்களில் மற்றொரு பிரிவினர்தான், கட்டிட சபையே தேவையில்லை. கட்டிட சபைக்கு தசமபாகம் கொடுப்பது சாபத்தை வருவிக்கும், சமுதாயத்திற்குள் ஊடுருவ அனுப்பப்பட வேண்டிய விசுவாசிகள், சுயநலப் போதகர்களால் விசுவாசிகள் என்ற பெயரில் சிறைப்படுத்தப்படுகிறார்கள் என்ற துர்செய்தியையும் பரப்பி வருகிறார்கள். எத்தனை தான் சபை கூடிவருதலின் அவசியத்தை நாம் போதித்து வந்தாலும் (எபி. 10:24,25). ஒரு குறிப்பிடத்தக்க அளவு மக்களின் சபை கூடிவரும் ஆர்வம் குறைந்து வருவதற்கு காரணம், வெளி உலகில் இதுபோன்ற செய்திகளை அவர்கள் தினந்தோறும் கேட்பதால் கூட இருக்கலாம்.

இளைஞர்களுக்கு சபை ஆர்வம் குறைவதற்கு கூட, இச்செய்தியின் தாக்கம் ஒரு காரணமாக இருக்கக்கூடும். இன்றைய அநேக இளைஞர்களின் வேலைநேரம், ஆராதனை நேரத்திற்கு பொருத்தமாயிருக்கவில்லை. அவர்களுக்கு மாற்று ஆராதனைக்கான வழிமுறைகள் நம்மிடையேயில்லை. அவர்கள் சபைக்கு வரும் வேளையில், முதல் இடம் கர்த்தருக்கு கொடு என்ற போதனையின் மூலம் தீர்வை மிக சிக்கலாக்கி விடுகிறோம். குற்ற உணர்வுடன் திரும்பிச் செல்கிறார்கள்.

அவர்களில் அநேகருக்கு வேலை ஸ்தலத்தில் தினமும் Devotion பண்ணும் பழக்கம் உண்டு. அவர்களுக்கு வரும் ஊடகச் செய்தி என்ன? நீ கட்டிட சபையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் கிறிஸ்துவை தலையாக கொண்ட அதரிசன சபையில் நீ ஏற்கெனவே இருக்கிறாய். அதுதான் முக்கியம் என ஆற்றி தேற்றிவிடுகிறார்கள். ஆகவே தான் சபை கூடிவருதலை விட்டுவிட்டவர்கள் கூட குற்ற உணர்வு அடைகிறதில்லை.

இப்படி எதிரும் புதிருமான அர்த்தத்துடன் இக்கொள்கை பரவிவரும்போது ஒரு ஸ்தல சபை மிஷனல் சர்ச் பற்றி ஓரளவுக்காகிலும் கற்பிக்கப்படுவது அவசியம்.

## II. மிஷனல் சர்ச் கொள்கைகளின் முக்கிய வலியுறுத்தல்கள்

1. ஒட்டுமொத்த சபையும் ஒரு சமுதாயம், அச்சமுதாயம், சபைக்கு வெளியேயுள்ள சமுதாயத்தை மறுரூபப்படுத்துமளவு ஊடுருவ ஆயத்தமாக்கப்பட வேண்டும்.

2. அதாவது சபைக்குள் நடைபெறும் ஊழியங்களைச் செய்யும்படியே நமது அனைத்து பயிற்சிகள் இருக்கிறது. (உ-ம் சிறுவர் ஊழியம், வாலிபர் ஊழியம்) ஆனால் வெளி உலகத்தில் யார் மத்தியில் விசுவாசிகள் இருக்கிறார்களோ அவர்களைச் சந்திக்கும் பயிற்சி கொடுக்க வேண்டும்.

3. உள்ளூருக்கு ஏற்றவிதத்தில் (Contextualization) நற்செய்தி அறிவிக்கவும் சபையாருக்கு பயிற்சி கொடுக்க வேண்டும்.

4. சபையாரில் ஒரு சிலர் அனுப்பப்பட்டவர்கள் என்றல்ல, சபையே சமுதாயத்திற்குள் அனுப்பப்பட வேண்டும். அதுவே மிஷனல் சர்ச்.

5. மாற்றுக் கலாச்சாரம் மக்களுக்குக் கிறிஸ்தவ போதனைகளை எளிதாக்க வேண்டும்.

6. நமது சபை நிகழ்வுகள் மூலம் ஜனங்களை சபை பக்கம் ஈர்க்க நினைக்கிறோம். (Attractional Church) ஆனால் முழுச் சமுதாயத்தையும், ஆன்மீக பொருளாதார, சமூக விடுதலையடையச் செய்யும் ஊழியப் பயிற்சி கொடுத்து சபையார் அனுப்பப்பட வேண்டும் (Holistic Approach).

## III. நன்மையும் – எச்சரிப்பும்

1. மிஷனல் சர்ச், நம்மால் விடப்பட்ட பகுதிகளிலும் கவனத்தை திருப்பி தீவிர சுவிசேஷப் பணியாற்றுகிறது.

2. நாம் புரிந்துகொள்ள இயலாத கலாச்சார விவகாரங்களில் புதிய அணுகுமுறையை கையில் எடுக்கிறது.

3. சபைக்கு கவர்ந்து அழைத்துவரும் திட்டங்களில், பயிற்சிகளில், நிகழ்வுகளில் நமது கவனம் இருக்கிறது. மிஷனல் சர்ச், சபையில் உள்ள அனைத்து விசுவாசிகளுக்கும், அவர்கள் வேலை, படிப்பு, வாழ்விடங்களில் மிஷனல் சர்ச் வாழ்க்கை வாழ Missional ஊழியம் செய்ய பயிற்றுவிக்கிறது.

4. மிஷனல் சபையாக மாற பிரதான கட்டளையை மையமாக கொண்டு சபை செயல்பட வேண்டும். (பாடல்கள், ஆராதனை, ஜெபங்கள், பிரசங்கம் அனைத்தும் விசுவாசிகளின் வாழ்வின் நோக்கத்தை உணர்த்தக்கூடியதாக இருக்க வேண்டும்).

5. எச்சரிப்பு : சபை என்பது சமுதாயத்திற்குள் அனுப்பப்பட வேண்டும் என்று ஆரம்பித்து சபையை பிராந்திய உணர்வுக்குள் முடக்கிவிடும் அபாயம் உண்டு. இதனால் மிஷனரிகளை உலகளவில் அனுப்பும் திட்டம், சபை ஸ்தாபிப்பது (நமது

புரிதலுள்ள சபை அமைப்பு) பெருமளவில் புறக்கணிக்கப்படும் அபாயம் உண்டு. அதாவது உள்ளூர் நற்செய்தி மயமாக்கல் அவசியம் தான்.(Saturation Evangelism) TL ஆஸ்பான் கூற்றுபடி உள்ளூரில் ஊழியம் முடித்த பிறகுதான் (எருசலேம்) பூமியின் கடைசிபரியந்தம் சபை அனுப்பப்பட வேண்டும் என்று கூறினால் முழு உலகத்திற்கும் நற்செய்தி எப்போது போகும்? (மத்.28:19,20) என்பது சிந்தனைக்குரியது. இந்த பிரச்சனைக்குத் தீர்வாக ஸ்தல சபையை சமநிலைப்படுத்த உலக தரிசனத்துடன் உள்ளூர் மிஷன் என்ற ஸ்லோகம் உதவிடும் (Global Vision - Local Mission)

**இறுதியாக**

வேதாகமத்தில் சொல்லப்பட்ட ஆதிச்சபை நிலையடைய என்ன செய்யவேண்டும் என்ற விவாதங்கள் ஒவ்வொரு எழுப்புதல் காலத்திலும் விவாதிக்கப்பட்டுள்ளது. எருசலேம் சபை உள்ளூரை வசனத்தினால் நிரப்பினதையும் சபை சமுதாயத்திற்குள் அச்சத்தை ஏற்படுத்தும் அளவு தாக்கத்தை ஏற்படுத்தினதையும் விசுவாசிகள் அனைவரையும் (அப்.8:1-4) சுவிசேஷ ஊழியத்திற்கு தயார்படுத்தினதையும் மையமாக கொண்டே மிஷனல் சர்ச் வாதங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நாமும் இப்படி நமது சபைகளை மாற்றத்தானே போராடிக் கொண்டு இருக்கிறோம். அதே சமயம் அந்தியோகியா சபையின் ஊழியத்தையும் மறந்துவிட இயலாது. அந்தியோகியா சபை போன்று உலகத்திற்கு மிஷனரிகளை அனுப்பும்போதே சபைகள் பெருகும். உலகம் சந்திக்கப்படும். எனவே மிஷனல் சர்ச் உணர்வுடன் உள்ளூரில் வேலை செய்வோம். மிஷனரி சபையாக மாறி ஒவ்வொரு ஸ்தலசபையும் முழு உலகத்திற்கும் மிஷனரிகளை அனுப்பும் இயக்கமாகவும் மாறுவோம்.


## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102

## பட்டமளிப்பு விழா



Trinity : 27.02.2020
TBC : 03.03.2020
ABSC : 26.03.2020
MABC : 29.03.2020

## முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவர்களின் அடையாளங்கள்

- அவர்கள் எப்போதும் உண்மையே பேசுபவர்கள்.
- அவர்கள் நன்றாக கவனிக்கும் திறன் உள்ளவர்கள்.
- எளிதில் கோபமடையமாட்டார்கள்.
- உடனே மன்னிக்கும் தன்மை உடையவர்கள்.
- நம்பகத்தன்மை உடையவர்கள்.
- பிறருக்கு உதவுபவர்கள்.
- ஜெபிப்பதற்கும் உபவாசம் இருப்பதற்கும் பசி தாகமுடையவர்கள்.
- கர்த்தரின் வார்த்தையை (சார்ந்திருப்பவர்கள்) முற்றிலும் நம்புபவர்கள்.
- தேவன் உயர்த்தும் போதெல்லாம் தங்களைத் தாழ்த்திக் கொள்பவர்கள்.
- தங்களுக்காக வாதாடமாட்டார்கள்.
- தவறை உணர்ந்ததும் உடனே மனம் திரும்புபவர்கள்.
- மக்களை நேசிப்பவர்கள்; இரக்க குணமுடையவர்கள்.
- எப்போது பேசவேண்டும் எப்போது அமைதி காக்க வேண்டும் என்பதை அறிந்தவர்கள்.
- வாழ்வின் பல்வேறு துறைகளிலும் ஞானம் நிறைந்தவர்கள்.
- மக்களை மதிப்போடு அவர்களின் உணர்வுகளைப் புரிந்து நடப்பவர்கள்.
- அவர்கள் முன்கோபியாய் இராமல் மிகவும் பொறுமையுடன் இருப்பவர்கள்.
- தெய்வ பயம் உடையவர்கள்.
- கனம் பண்ண வேண்டியவற்றிற்கு கனம் பண்ணுபவர்கள்.
- தங்களிடம் உள்ளதைக் கொண்டு திருப்தி அடைபவர்கள்.
- தலைமைத்துவ திறமைகளை உடையவர்கள்.
- விருந்தினர்களை நன்கு உபசரிப்பவர்கள்.
- அர்ப்பணிப்பின் ஆவியை உடையவர்கள்.
- தவறான உபதேசங்களுக்கு ஏமாறாதவர்கள்.
- மற்றவர்களை அற்பமாய் எண்ணாதவர்களாயும், வீண் வதந்திகளைப் பரப்பாதவர்களாயும் இருப்பவர்கள்.
- விசுவாசமுடையவர்கள்.
- சபை காரியங்களில் ஈடுபடுவதோடு தவறாமல் சபைக்குச் செல்பவர்கள்.
- வாழ்க்கையின் எல்லாப் பகுதியிலும் தூய்மையாய் இருப்பார்கள்.
- உணர்வுள்ள ஆவியை உடையவர்களாய் பாவத்தை வெறுப்பவர்கள்.
- மற்றவர்களை விட தாங்கள் பரிசுத்தவான்கள் போன்று நடந்து கொள்ளமாட்டார்கள்.
- மற்றவர்களோடு போட்டி போடமாட்டார்கள்.
- ஆத்துமா ஆதாயம் செய்வதில் தீவிரமாய் இருப்பார்கள்.

உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்!... நான் ஒரு முதிர்ச்சி பெற்ற கிறிஸ்துவனா? நம் பலவீனங்களை கண்டறிந்து அவற்றை சரி செய்ய தேவன் தாமே கிருபை தருவாராக!



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ

பாஸ்டர். பெவிஸ்டன்
பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்

ஹாய் குட்டீஸ் எப்படி இருக்கிறீங்க? நீங்க அனுப்பி தருகிற நல்ல கருத்துக்களுக்காக சாட்சிகளுக்காக தேவனை துதிக்கிறேன். இது எக்ஸாம் டைம். நல்லா ஜெபம் பண்ணிட்டு படிங்க. ஹெல்தியா சாப்பிடுங்க. கட்டாயம் ஓய்வெடுங்க. அப்புறம் ரிலாக்ஸா எக்ஸாம் எழுதுங்க. உங்களுக்காக நாங்க ஜெபிக்கிறோம். ஆல் தி பெஸ்ட்.

என்ன குட்டீஸ், கதை கேட்க ரெடியாயிட்டீங்க. அப்படித்தானே? ஓக்கே... நடந்த ஓர் உண்மை சம்பவத்தை தான் உங்களுக்கு சொல்லப்போகிறேன். நல்லா கவனிக்கணும் சரியா...!

தென் கொரியாவில் புத்த மதத்தை சேர்ந்த ஒரு வாலிபன் தரையிலே விரிக்கப்பட்டிருந்த கிழிந்த பாயில் படுத்துக்கொண்டு, கந்தலான போர்வையை போர்த்திக்கொண்டு மனதில் பல குழப்பங்களோடு உடல்நிலை சரியில்லாமல் இருந்தான். ஒரு நாள் வேலை செய்து கொண்டிருந்தபோது திடீரென்று வாயிலிருந்து இரத்தம் வந்தது. பின்னர் மூக்கிலிருந்தும் இரத்தம் வந்துக்கொண்டே இருந்தது. மார்பு அடைத்தது. மூச்சுவிட முடியவில்லை. செத்தவனைப் போல இருந்த அவனை ஆஸ்பத்திரிக்கு தூக்கி சென்றார்கள். டாக்டர்கள் பரிசோதித்துவிட்டு காசநோயினால் (T.P) நுரையீரல் அரித்துவிட்டது. இனிமேல் இவனைக் காப்பாற்ற முடியாது. மரித்துப்போய்விடுவான் என்று சொல்லி அனுப்பி விட்டனர்.

அதைக் கேள்விப்பட்ட ஒரு சிறு பெண், எப்படியாவது அவருக்கு புதிய ஏற்பாட்டை கொடுத்துவிட வேண்டும் என்று அவரிடம் வந்தாள். கிறிஸ்தவர்களையும் வேதத்தையும் வெறுக்கும் அவன் கோபத்துடன் “நீ வெளியே போய்விடு” என்று சொல்லி அவளை விரட்டினான்.

மிகுந்த துக்கத்தோடு திரும்பிச் சென்ற அவள், அடுத்த நாளும் அவனைத் தேடி வந்தாள். நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். இயேசு கிறிஸ்து உங்களுக்கு அற்புதம் செய்வார் என்று மிகுந்த அன்போடு அவள் சொன்னபோதும் அவன் கோபத்துடன் அவளை விரட்டினான்.

அவள் சோர்ந்து போகவில்லை. மறுபடியும் ஒருநாள் புதிய ஏற்பாட்டினை எடுத்துகொண்டு வந்தாள். அவனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. அவளுடைய கன்னத்தில் ஓங்கி அடித்து, வெளியே போ என்று சொல்லி தகாத வார்த்தைகள் கூறி அவளை விரட்டினான்.

அப்பொழுது அவள் “நீங்க என்னை அடித்தாலும் பரவாயில்லை! இந்த வேதப் புத்தகத்தை வாசிங்க” என்று சொல்லி, அந்தப் புத்தகத்தை அவனிடத்தில் நீட்டினாள். அவனும் அவளை தன்னை விட்டு வெளியே அனுப்பி விடுவதற்காக, அந்த புதிய ஏற்பாட்டை வெறுப்புடன் வாங்கிக்கொண்டான். அவள் வெளியே போனதும், அந்த புத்தகத்தைத் தூக்கி ஒரு மூலையில் எறிந்து விட்டான். சில நாட்களுக்கு பின்பு அதை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான். அதில் மதக் கோட்பாடுகளோ அல்லது மத ஒழுங்குகளோ எழுதப்பட்டு இருக்கும் என்று எண்ணினான். ஆனால் அதில் இயேசு என்கிற மெய் தேவனைக் குறித்தும், அவர் செய்த அற்புதங்களை குறித்தும் வாசித்தான்.

வேத வசனங்களை வாசிக்க, வாசிக்க, அவன் இளம் வயதில் செய்த பாவங்கள் எல்லாவற்றையும் உணர்ந்து, மனதில் குத்தப்பட்டு அவைகளை அறிக்கை செய்தான். மனம் திரும்பி பரிசுத்தமாக வாழ ஆரம்பித்தான்!. இயேசு கிறிஸ்துவினிடத்தில் இருந்து அற்புத சுகத்தைப் பெற்று கொண்டான். கடைசியில் அவன் ஒரு ஊழியக்காரனாக மாறினான். அந்த வாலிபன்தான் இன்றைய டாக்டர் பால் யாங்கி சோ அவர்கள். உலகில் மிகப்பெரிய ஆலயம் எங்கிருக்கிறது என்று கேட்டால் அது தென் கொரியாவில் என்று சொல்வார்கள். இந்த ஆலயத்தில் எட்டு இலட்சத்திற்கும் அதிகமான சபை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். கேட்கவே ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆம் அந்த சபையின் போதகர் தான் டாக்டர் பால் யாங்கி சோ.

அன்பு தம்பி தங்கச்சி நாகமானின் சுகத்திற்கு காரணமான சிறு பெண்ணைப் போலவே இவருடைய மகத்தான ஊழியத்திற்கு காரணம், அந்த சிறுமிக்குள் இருந்த அன்பும், கர்த்தரைக் குறித்து அவருக்கு சொல்ல வேண்டும் என்கிற வைராக்கியம் தான் ஆகும். இந்த சிறுமிக்குள் இருந்த வாஞ்சையும் தாகமும் நமக்குள் இருக்கிறதா? உன்னைப்போன்ற ஒரு சிறுமியால் பால யாங்கி சோ-வை மாற்ற முடியும் என்றால், உன்னை கொண்டும் பலரது வாழ்வை மாற்றுவார். நம் பாரத தேசத்தில் எத்தனையோ பேர் கர்த்தரை அறியாதபடி நித்தமும் மரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

“யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்” என்ற பொன்மொழிக்கேற்ப நீங்கள் பெற்ற தேவனின் ஆதரவையும், ஆசீர்வாதங்களையும் உன்னை போன்ற சிறுவர்கள் பெற வேண்டாமா? நீ தெருக்களுக்கும் வீதிகளுக்கும் செல்ல வேண்டாம். உன்னோடு படிக்கும் சக மாணவர்களுக்கு உன் நண்பர்களுக்கு இயேசப்பா செய்த நன்மைகளை பகிர்ந்து கொள்ளலாமே. நீங்கள் செயல்பட ஆரம்பித்தால் வியாதியினால் மாத்திரமல்ல, பாவங்களிலும், சாபங்களிலும் கட்டப்பட்டு மரணத்தை நோக்கி போய் கொண்டிருக்கிற ஜனங்களுக்கு உங்கள் மூலம் தேவன் மகிழ்வான வாழ்வை கொடுப்பார் என்பது உறுதி.

“கர்த்தர் : நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவை களையெல்லாம் நீ பேசுவாயாக” (எரே. 1:7).

அடுத்த இதழில் மற்றொரு சுவாரசியமான கதையோடு உங்களை சந்திக்கிறேன். உங்கள் கருத்துக்கள், சாட்சிகள் 97503 81784 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பலாம். அடுத்த இதழில் சந்திப்போம்.

---

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**
43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17
செல் : 94434 15484



# “...அவர்கள் பிள்ளைகள் முன்போலிருப்பார்கள்”

**Rev. பெகின் சாமுவேல்**
(AGCM Director)

ஆண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் இதழ் வாசகர்கள் அனைவருக்கும் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வருடத்தில் தேவன் சிறுவர்களைக் குறித்து கொடுத்திருக்கும் வாக்குத்தத்தம் அவர்களை மகிமைப்படுத்துவேன்...அவர்கள் பிள்ளைகள் முன்போலிருப்பார்கள் எரே.30:19,20. இந்த அதிகாரத்தில் அநேக காரியங்களை சிறைப்பட்டுப்போயிருந்த தன் ஜனங்களைக் குறித்து சொல்லிவிட்டு, அவர்கள் பிள்ளைகளைக் குறித்து சொல்லும்போது உன் பிள்ளைகள் முன்போலிருப்பார்கள் என்கிறார். இந்த காலத்தில் வாழும் பிள்ளைகளுக்கும் பெற்றோராகிய நமக்கும் ஒரு பிளவு (Generation gap) இருக்கிறது. நம்மைவிட அறிவு பெருத்தவர்களாய் இருக்கின்றனர். நவீன காலத்தில் வாழும் இக்காலத்து சிறுவர்கள் Google generation kids என்று அழைக்கப்படுபவர்கள், Technologyக்கு அடிமையாகி அதன் பிடியில் சிக்குண்டுள்ளனர். தேவனைத் தேடுவதற்கோ, வேதத்தை வாசிப்பதற்கோ மனமில்லாதவர்களாய் உள்ள இக்காலத்து சிறுவர்களைக் குறித்த பயமும், கலக்கமும் பெற்றோர்களாகிய ஒவ்வொருவருக்கும் உள்ளது. இச்சூழலில் தான் கர்த்தர் உன் பிள்ளைகள் முன்போலிருப்பார்கள் என்பதாக வாக்கு கொடுத்திருக்கிறார்.

வேதாகமத்தில் பார்ப்போமானால் முற்காலத்தில் பிள்ளைகள் எவ்வாறு இருந்தனர் என்பது நமக்கு நன்கு புலப்படும்.

**1. உன் பிள்ளைகள் முன்போல தேவனுக்கு பிரியமாய் நடப்பார்கள்**

சாமுவேலைக் குறித்து வாசித்தால் ஒரு நல்ல சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்தவன். 1சாமு.2:26 வசனத்தை வாசிக்கும்போது, சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்து கொண்டான் என்று கூறப்பட்டுள்ளது.

சாமுவேல் கர்த்தருக்கு பணிவிடை செய்துகொண்டிருந்தான். அவன் வாழ்ந்த நாட்களில் நியாயப்பிரமாணம் இல்லை. கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது. ஆனாலும் தேவன் மேலிருந்த பற்று, பக்தி குறையாமல் வளர்ந்து வந்தான்.

**2. உன் பிள்ளைகள் முன்போல தேவனைத் தேடுவார்கள்**

நம் முற்பிதாக்களில் ஒருவராகிய ஈசாக்கு தேவனைத் தேடுவதற்கு நல்ல உதாரணம். ஆதி.24:63-ல் இவ்வாறாக வாசிக்கிறோம். ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம் பண்ண வெளியிலே போயிருந்து, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது ஒட்டகங்கள் வரக்கண்டான்.

தேவனைத் தேடுவதற்கு நேரம் செலவழிக்க பிள்ளைகளை உற்சாகப் படுத்துவோம். தேவனைத் தேடின ஈசாக்கு கையிட்ட எல்லாக் காரியங்களிலும் ஆசீர்வாதத்தை பெற்றான். அவன் வெட்டின துரவுகளிலெல்லாம் நீரூற்றைக் கண்டான். விருத்தியடைந்தான். மகா பெரியவனானான் என்று அவனைக் குறித்து

வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. பிள்ளைகளின் ஆசீர்வாதமான எதிர்காலம் தேவனைத் தேடுவதில்தான் உள்ளது.

முழு இஸ்ரவேல் தேசத்தையும் ஆட்சி செய்த தாவீது தேவனுடைய ஆலயத்தை நேசித்தான். ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது என்றான். தேவனை எப்பொழுதும் ஆராதித்தான். ஒரு நாளில் ஏழு முறை ஜெபித்தான். தேவனுடைய வேதத்தை மிகவும் நேசித்தான். அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம் என்று ஆணித்தரமாக சொன்னான். கறவலாடுகளின் பின்னால் சென்ற அவனை கர்த்தர் ராஜாவாக உயர்த்தி வைத்து மேன்மைப்படுத்தினார். எனவே இந்த வாக்குத்தத்தத்தைக் கொண்டு நாம் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். பிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வதிப்பார். சாமுவேல், ஈசாக்கு, தாவீதைப்போல கர்த்தர் உங்கள் பிள்ளைகளையும் தேவனைத் தேடுகிறவர்களாக மாற்றுவார்.

கர்த்தருடைய கிருபை நம்மனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

## போட்டி எண் : 81 (சரியான விடைகள்)

1.நாரை; 2.நாவு; 3.இஸ்ரவேலின் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது என்பது மெய்யே; 4. ஜனங்களின் வழிபாடுகள்; 5.பூமி; 6.மாயமானது; 7. ஆலயம்; 8.எருசலேமை; 9.தட்டார் வார்ப்பித்த விக்கிரகம் பொய்யே; 10. கர்த்தருடைய பெருங்காற்றாகிய கொடிய புசல்; 11.பட்டயம்; 12.ஆரவாரம்; 13. பாவங்கள்; 14. ஒரு தீங்கும் மகா சங்காரமும்; 15.காட்டு கழுதைகள்; 16.இருதயமே; 17.மண்பாண்டம்; 18.(கர்த்தருடைய) என் வார்த்தை; 19. தகைவிலான் குருவி; 20.கர்த்தருடைய பட்டயம்; 21. தீ; 22. துருத்தி; 23. கச்சை; 24.எகிப்து தேசம்; 25.கவுதாரி.

## போட்டி எண் : 81 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: கிரிஜா; கந்தையா; மாரிமுத்து தாவீது; K.ஹெப்ஸி; S.ஜெயா; மகேஸ்வரி; மாளவிகா; பியூலா; டோரா; S.முத்துலெட்சுமி; ஜோதிலட்சுமி; S.கலா; கனகவல்லி; புனிதா; கோகிலா; சுமதி; மயில்ராஜ்; தங்கமணி; சுபா; E.கலா; S.எஸ்தர்கலா; சித்ரா; மாது; குளோரி; ராதாமணி; விஜி; மரகதம்; A.மஞ்சு; ரோஸ்லின்; சாந்தி; ரம்யா; அமுதா; புஷ்பவல்லி;| **ஸ்ரீவில்லிபுத்தூர்** : அனிதா; இவாஞ்சலின் ஆக்னஸ்; கிரேஸ்; டெய்சிராணி; ஜெஸிக்கா ஆக்னஸ்; மகேஸ்வரி; ஜெயராணி; சத்யா; ஞானம்; மெசி; குளோரி; நித்யா; பாஞ்சாலி; நாச்சியார்; கிறிஸ்டிபிரியா; தேவபிரியா; ரூத் ரெபேக்காள் | **விருத்தாசலம்**:மெனோரா; பவுலின்மேரி; பெஞ்சமின்; பால்; டேனியல்;காபிரியேல்; ரோஸ்லின்; |**இறைச்சகுளம்** :ராதிகா; அமலாவேணி; ஷோபா, ஜெஸி, எஸ்தர்; மோனிஷ்; நளினா ஷாலினி; கவிதா ஸ்ரீ; கனகமணி; சதா; ஜேஸ்மின்; மகிழ் ஜெயந்தி; |**தேனி** :ரவிபிரபா; தீபா; எஸ்தர்; ராகேல்; பூமணி ஜான்சி; பாலாமேரி; கிருபா; திரவியச்செல்வி; தனம்; |**கடையநல்லூர்** : வினோலியா; நளினி; தங்கராஜ்; ஜெபசீதாலெட்சுமி; ஸ்டெல்லா டாரிஸ்; ராணி; மேரிகுட்டி; |**திருநின்றவூர்** : ஜென்சி; லாலி; எழிலரசி; மார்த்தாள்; ரோஸ்லின் மேரி; அம்மு; | **திருச்சி** : தனபாக்கியவதி; அனுசுயா; கிறிஸ்டி மகாலஷ்மி; ஜெயந்தி; மேரிசுஜாதா; கேத்ரின் மேரி; | **ஆலங்குளம் (வி)** : ரெஜினா சாரு; பிரபா; கிருபா; தங்கம்; உமா; பிளாரன்ஸ்; | **மதுராந்தகம்** : ராணி; ஹரிணி மெர்லின்; கிரேஸ் பியூலா; சுனிதா ரோஸ்லின்; மெர்ஸி; | **தருமபுரி** : நீனாபிரித்தா; மெல்வினா ஜோயா பிரிஸ்சில்லா; தேன்மொழி; ஜாஸ்மின்; | **தூத்துக்குடி** : எஸ்தர் செல்வராணி; சில்வெஸ்டர்; கிரேஸி; கிப்டா மேரி; | **நாசரேத்** : தாசன்மோசஸ்; எஸ்தர்; பரிபூரணம்; மெர்சி; | **ஆறுமுகநேரி** : கஸ்தூரி; பானுமதி; சுகிர்தா; எஸ்தர்

## போட்டி எண் : 81 (சரியான விடை எழுதியவர்கள்)....

வெண்ணிலா; | **ஒட்டப்பிடாரம்** : சரஸ்வதி; சுப்ரமணியன்; பானுமதி; இஸ்ரவேல் கிருபாகரன்; | **வில்லியனூர்** : புரோனிக்கா; ஷீபா; செல்லப்பன்; ரஞ்சிதம்;| **நெல்வாய்**; கிப்டி அருணா; கலையரசி; கிருபா; | **எடப்பாடி**: மாலதி; ஜோசப்மேரி; சுதா;| **நாகமலை** : பரிமளா; விஜிலா; மரியரூபி பிளாரன்ஸ்; | **சாத்தூர்** : சங்கீதா; கீதா வசந்தகுமாரி; முத்துலெட்சுமி; | **மதுரை** : மனோரஞ்சிதம்; லூயிஸ்; மேரி; | **கிச்சிப்பாளையம்** : எஸ்தர், E.தீபா. N.தீபா; | **வந்தவாசி** ; தயா பிரெய்ஸி; அபிஷா சுமதி; விஜயா; | **திசையன்விளை** : ராணி; ஜெயசீலி;எஸ்தர்; | **மேடவாக்கம்**:பியூலா; ஜமுனா; மெர்சி சுகுனாபாய்; | **கோயம்புத்தூர்** : மேரி; கிறிஸ்டி; மொழி; | **வடக்கு ஆத்தூர்** : ரூத் பாக்கியவதி; மகேஸ்வரி; | **மதுரை சிந்தாமணி** : அருண்; மேபெல்; | **கொட்டாகுளம்** : ஜான்சிராணி; ரக்ஷனா;|**வத்ராப்**:கிறிஸ்டி;குளோரி;| **திருவண்ணாமலை** : சுகுணா; அங்கயற்கண்ணி; | **மடத்துக்குளம்** : பிரீத்தி; ஜெனி மெரிலின் கிருபா; | **காரைக்கால்** : உமா; ராஜாமணி; | **ஓசூர்** : ஐடா; அனிதா; | **புஞ்சை புளியம்பட்டி** ; புவனா; சங்கீதா; | **K.T.C.நகர்** : பிரேமா ரூத்; சில்வியா; | **பெருங்குளம்** : பியூலா ஜோபாய்; ஜெயலின் சிங்; **பள்ளிக்கரணை**: ஜெயலஷ்மி; சார்லட் லாசரஸ்; | **அச்சரப்பாக்கம்** : திரேசா; பிளஸ்சி;| **கிருஷ்ணகிரி** : அனிதா ஷைலா; அபிநயா; | **பேயன்விளை** : பிரேமா; ஜாய்ஸ்மேரி;| **நந்தவனப்பட்டி** : செல்வராஜ்; தங்கபாண்டியன்; | **முத்தையாபுரம்** : காபிரியேல் அந்தோணி; மங்களம்; | **ஆழ்வார்குறிச்சி** : ஹரிலீலா; தெபொராள்; | **புதுச்சேரி** : குப்பம்மாள்; மேரி ஜான்சி;| **கோவில்பட்டி**:ஜோன் ஆப் ஆர்க்; வால்டர்சிங்; | **நாகர்கோவில்** : பிரேமா; மரியநேசம்;| **காளையார்கோவில்** : அருளானந்தம்; சத்யா; | **வக்கிரன்கோட்டை**:ருக்குமணி; குழந்தை தெரசம்மாள்; | **பாவூர்சத்திரம்**; ஜெசிலி; மேரி; | **சின்னகாளப்பட்டி** : சத்தியபரன்; | **ஆண்டிபட்டி**: தேவபாக்கியம்; | **சென்னை** : மெர்லின் ஹெலன் பிரீத்தியா; | **புளியங்குடி** : ஜெயமணி; சுந்தரி;| **ஆண்டாள்புரம்** :கனகவல்லி; | **ஆம்பூர்**:கிரிஜா சத்யா; | **பாளையங்கோட்டை** : சாந்தகுமாரி;| **கொட்டிவாக்கம்** : அமுதவல்லி; எப்சிபா; செல்வி; | **நான்குநேரி** :லாரன்ஸ் சேவியர்;| **ஆசாரிபள்ளம்** : ஏஞ்சல்குமார்; | **குற்றாலம்**: வேளாங்கன்னி; | **புதுக்கோட்டை** : ஜெனிபர்; **ஆழ்வார்திருநகரி** : பனிமலர்; | **கம்மாபுரம்** : சுகிர்தா; | **வேப்பூர்** : சரோஜினி; **வால்பாறை** : ஜாஸ்மீன் ரூட்ஸ்; | **திருக்கோவிலூர்** : லஷ்மி தேவி; | **தஞ்சாவூர்** : விஜி; | **தளவாய்புரம்** : மணிகண்டன்; | **கடாட்சபுரம்** : ரேவதி; | **பழையகாயல்** : எலிசபெத்;| **சமாதானபுரம்** (தி) லீலா;| **கும்மிடிப்பூண்டி** : இம்மானுவேல்; | **ஏரல்** : சத்யா; | **திண்டுக்கல்**: லதா; | **நாகப்பட்டினம்** :வசந்தகோகிலம்; | **வில்லிவாக்கம்** : ஜாஸ்மின் ரத்னா; | **உடுமலை** : ஜோன்சி; | **அரும்பாக்கம்** : ஜெனித்தா தங்கராணி; | **அந்தமான்** : ஜேக்லின்; | **கம்பம்** : ஜோதிமணி; | **வெள்ளோடு** : விசுவாசமேரி; | **ஏர்வாடி** : மரகதம்;| **சிங்கம்புணரி** : ஷீலா ஜோஸ்பின்; | **டோனாவூர் (தி)** : அல்போன்ஸ்; | **இளையரசனேந்தல்**: ரெஜினா; | **K.K.வலசை**: இருதயமேரி; |**அம்பலவானபுரம்** : நிர்மலா; |**வடக்கன்குளம்** :ராணி; |**சூளைமேடு**; அருள்மேரி; | **பாலவாக்கம்** : பெனிட்டா; |**ஏர்காடு**: டேவிட்; |**அவனாசி** : தீபா; |**காசிமேஜர்புரம்** : ரூத்; | **பாம்பன்குளம்** : பஸ்மத்; |**பெங்களூர்** : தேவபிரியா; |**T.M.பூண்டி**; ஜீடி; |**பெரியகுளம்** : மனோகாசி; |**கோரிமேடு**; மரியா; |**அன்னதானப்பட்டி** : மார்கரெட்; |**நன்னிலம்** : சுந்தரமூர்த்தி; |**வெள்ளக்கல்** : கலா; |**விருதுநகர்**: ஜேசுராஜ்; |**சின்னமலை (செ)** : மேரியன் நர்கீஸ்; |**திண்டிவனம்** : சாராள் அறிவுச்செல்வி; |**களக்காடு**: விமலாபாய்; |**தென்னம் பாளையம்** : ரோஸ்லின்சாந்தி.

# பரிபூரண ஜீவன் போட்டி எண் – 82

## எரேமியா (26–52) இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. யார் ராஜாவாகிறபோது இருத்தொரு வயதாயிருந்தான்?
2. யார் ஜனத்தின் நடுவே வரத்தும் போக்குமாயிருந்தான்?
3. யான் தான் வாந்திபண்ணி அதிலே புரளுவான்?
4. யார் ஒடுகிறான்?
5. யார் அருமையான குமாரன்?
6. யார் அறிவில்லாமல் மிருக குணமானார்கள்?
7. யார் அம்மோன் புத்திரரின் ராஜாவாயிருந்தான்?
8. யார் தப்பிப்போக வேண்டாம்?
9. யார் விரோதமாக உபாயங்களைச் சிந்தித்திருக்கிறான்?
10. யார் பாழாக்கப்பட்டான்?
11. நேரியாவின் குமாரன் யார்?
12. ரேகாபின் குமாரன் யார்?
13. பஸ்கூரின் குமாரன் யார்?
14. கூஷியின் குமாரன் யார்?
15. அசூரின் குமாரன் யார்?
16. கரேயாவின் குமாரன் யார்?
17. யோசியாவின் குமாரன் யார்?
18. மாத்தானின் குமாரன் யார்?
19. நெத்தானியாவின் குமாரன் யார்?
20. அக்போரின் குமாரன் யார்?

## புலம்பல் (1-5) பொருத்துக

| | |
|---|---|
| 21. தண்ணீர் | - சமுத்திரம் |
| 22. பவளம் | - நுகம் |
| 23. இளம்பிராளம் | - அக்கினி |
| 24. காயம் | - சிவப்பு |
| 25. எலும்புகள் | - பணம் |

| | |
|---|---|
| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.04.2020 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**“பரிபூரண ஜீவன்”**
**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**
A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809
செல்: 88077 18002

## ஆண்கள் ஐக்கிய மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் கூடுகை





## திருச்சி மண்டல பெண்கள் முகாம்










## தாம்பரம் மண்டல உபவாச கூடுகை





## மதுரை தெற்கு மண்டல உபவாச ஜெபம்






Registered News Paper Regd. No. 8206 / 62

## வையம்பட்டி ஆலயப் பிரதிஷ்டை








## Women's Coordinators Meeting, Kanniyakumari








BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165